Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி–02 | 19–10–2005 | புதன்கிழமை | ஓசை–244




## அவசரகால பொருளாதார சட்டத்திற்கு எதிராக அமெரிக்க நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(வோஷிங்டன்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் சட்டபூர்வ நடவடிக்கைகளுக்கு ஆரதவளிக்கவும் 2004 ஆம் ஆண்டு ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிகளில் சேவையாற்றுவதற்கு தடையாக இருக்கும், அமெரிக்காவின் 2001 ஆம் ஆண்டின் சர்வ தேச அவசரகால பொருளாதார சட்டத்திற்கு எதிராக அமெரிக்க நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

அமெரிக்காவின் மீது 2001 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலின் பின் கடந்த ஆண்டு அமெரிக்க அதிபர் புஷ் இந்த அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தினார்.

அமெரிக்காவில் தடை செய்யப்பட்ட பல்வேறு அமைப்புக்களுடன் ஒகாலனின் குர்திஷ் விடுதலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிசார் மீது துப்பாக்கிச் சூடு; ஒருவர் பலி; ஒருவர் காயம்

(மட்டக்களப்பு)


மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பகுதியில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிறிலங்காப் பொலிசார் மீது நேற்று மாலை 3.00 மணியளவில் இனம் தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிசார் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இத் தாக்குதலில் படுகாயமடைந்த பொலிசார் சிகிச்சைக்காக மட்டக்களப்பு அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை கொல்லப்பட்ட பொலிசாரின் சடலம் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (32)

### - மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் -

# இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை, பொதுக்கட்டமைப்பு நிராகரிப்பு!



## தமிழர் தாயகம் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் பேச்சிற்கு இடமில்லை

(கொழும்பு)

**மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர் தாயகம், தமிழர் சுயநிர்ணய உரிமை என்பன மட்டுமல்ல இடைக் காலதன்னாட்சி அதிகாரசபை, பொதுக்கட்டமைப்பு ஆகியவையும் நிராகரிக்கப்பட்டுள்ளன.**

சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ நேற்றுக்காலை 9.43 மணிக்கு மகிந்தவின் சிந்தனைகள் என்ற தலைப்பில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டார். பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த இவ்வெளியீட்டு நிகழ்வில் மதத்தலைவர்கள், மகிந்தவை ஆதரிக்கும் அரசியல் கட்சிப்பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

முதலில் சர்வமதத் தலைவர்களிடம் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டது. அதனையடுத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது. தேசிய பொருளாதாரம் சமாதானம், தர்ம ஒழுக்கங்களுடனான கலாச்சாரம், இளம் தலைமுறைக்கு நம்பிக்கையான எதிர்காலம் ஆகிய விடயங்கள

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அநுரா புறக்கணிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கை வெளியீட்டு நிகழ்ச்சியை சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க புறக்கணித்தார்.

ஜாதிகஹெல உறுமய ஜே.வி.பி கட்சிகளின் கொள்கைகளை மகிந்த ராஜபக்ஷ முன்னிலைப்படுத்துவதாகவும் சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு துரோகம் செய்துவிட்டதாகவும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனவாதப்போக்கும் யுத்தப்போக்குமே உண்டு

-ஐ.தே.க.பொதுச்செயலர் திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

மகிந்தராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனவாதப் போக்கும் யுத்தவாதப்போக்குமே அடங்கியுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிப்பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ நேற்று வெளியிட்ட மகிந்தவின் கொள்கைகள் என்ற தேர்தல் விஞ்ஞாபனம் பற்றிப் கூறும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தத்தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்;

இந்த விஞ்ஞாபனத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகள் உள்ளடக்கப்படவில்லை. மக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் துப்பாக்கிச்சூடு; தபால் ஊழியர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வைத்தியசாலைவீதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்றுக்காலை 6.50 மணிக்கு இடம் பெற்றுள்ளது

தபால் ஊழியர் கதிர்காமத்தம்பி வேலுப்பிள்ளை (வயது-49) என்பவரே இச்சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார். இவர் தற்போது மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவத்தின் போது காயமடைந்தவர் பொலிசாருக்கு வழங்கிய வாய்முறைப்பாட்டை அடுத்து புளொட் உறுப்பினரான அரபாத் எனப்படும் நாகையா முருகமூர்த்தி என்பவரை பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். (32)

## சனாதிபதி சந்திரிகா நேற்று நாடு திரும்பினார்

(கொழும்பு)

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு லண்டன் சென்றிருந்த சனாதிபதி நேற்று நாடு திரும்பியுள்ளார். நேற்றுமாலை 4-30 மணியளவில் கட்டுநாயக்கவை இவர் வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனது மகனின் பட்டமளிப்பு நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்ற சனாதிபதி ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சனாதிபதி வேட்பாளரான பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டின் பின் நாடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அதிபர்கள் கொலையைக் கண்டித்து திருமலையில் பாடசாலைகள் பகிஷ்கரிப்பு

(திருகோணமலை)

யாழ்ப்பாணத்தில் இரண்டு பாடசாலை அதிபர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலையில் நேற்று பாடசாலைகள் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டன.

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த பகிஷ்கரிப்பு மற்றும் துக்கதினம் காரணமாக பாடசாலைகள் எதுவும் இயங்கவில்லை.

ஆரம்பப் பாடசாலைகள் கூட செயற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்தப் பாடசாலை அதிபர்களின் கொலையைக் கண்டித்து கடந்த 12ஆம் திகதி புதன கிழமை முதல் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் கல்வி நடவடிக்கைகள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் ஒருமாதம் நீடிப்பு

(கொழும்பு)

சிறிலங்காஅரசு அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடித்துள்ளது. இந்த நீடிப்பிற்கான வாக்களிப்பு நேற்று சிறிலங்காப் பாராளுமன்றத்தில் நடைபெற்றது. ஆளும் கூட்டணி உறுப்பினர்கள், ஐ.தே கட்சி உறுப்பினர்கள் உட்பட எண்பது உறுப்பினர்கள் அவசரகால நீடிப்பிற்கு ஆதரவாகவும் 19 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர். அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிக்கும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

## தவறிவிட்டது

குமரன் பத்மலோஜினி என்பவருடைய தே.அ.அட்டையும் நிரந்தர பயண அட்டையும் 20.09.2005 அன்று றெட்பானா விற்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி பேருந்து நிலைய நேரக கணிப்பாளரிடம் ஒப்படைக்கவும். தகவல்:- கு.பத்மலோஜினி. (6856)

## காணி விற்பனைக்கு

கிளி.A9 பிரதான வீதிக்கருகில் அமைந்துள்ள இந்துபுரம் கிராமத்தில் ஒரு ஏக்கர் வீட்டுக்காணி விற்பனைக்கு உள்ளது என்பதுடன் இக்காணியின் முன்புறத்தில் விற்பனைக்கான விளம்பரப் பலகை இடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்புகளுக்கு:-**V.R.T.** கட்டடம், கரடிப்போக்கு,கிளிநொச்சி.
**T.P-021 2285950.** **(6846)**

## உளமார்ந்த நன்றிகள்

*5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றிபெற துணைபுரிந்த கிளிநொச்சி மகாவித்தியாலய பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் மற்றும் அக்கறையுடன் கல்வி புகட்டிய வகுப்பாசிரியருக்கும் எனது இதய பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**நவநீதராஜா சிந்துஜா**
(6861) **கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவி**

**பூநகரி சுற்றயல் கூறு**

## தேநீர்சாலை வாடகைக்கு விடல்

மேற்படி விடயம் தொடர்பாக நடத்துனருக்குரிய விண்ணப்பங்கள் 22.10.2005 சனிக்கிழமைவரை ஏற்றுக்கொள்ளப்படும். இது தொடர்பாக விண்ணப்பித்தவர்கள் ஞாயிறு 23.10.2005 பிற்பகல் வைத்திய அதிகாரியுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**வைத்தியசாலை**
(6860) **அபிவிருத்திச்சபை.**

# கண்ணீர் அஞ்சலிகள்

அமரர்

## கணபதி இராசதுரை

*(அதிபர் யாழ்.மத்திய கல்லூரி)*



**அன்னை மடியில் 28.09.1947**
**ஆண்டவன் சந்நிதியில் 12.10.2005**

எங்கள் பள்ளிதனில்
முதல்வரின் அன்புச்
சோதரனாம் யாழ்.
மத்தியின் கல்லூரியின்
அதிபர் காலனால்
கவர்ந்த சேதி கேட்டு
அதிர்ந்து கவலை கொண்டோம்
ஆறாத துயர்களோடு
விம்பிடும் உங்கள்
மனங்களோடு
எங்கள் இதயங்களும்
மௌனித்து கசிகின்றன.

**ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**பெற்றோர்கள்**
**கிளி/பாரதி வித்தியாலயம்**
(6421)

# சாவு அறிவித்தல்

## முத்துத்தம்பி யோகநாதன்

யாழ். வேலணை கிழக்கை பிறப்பிடமாகவும் துணுக்காயை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட முன்னைநாள் துணுக்காய் ப.நோ.கூ.சங்க ஊழியர் முத்துத்தம்பி யோகநாதன் அவர்கள் 18.10.2005 நேற்று காலமாகிவிட்டார். அன்னார் தவமலர் (மணி) அவர்களின் அன்புக்கணவரும், றஜனி, சுகுனா (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும், கருணாகரன் (த.பொ.மே.நிறுவனம் துணுக்காய்) சுதாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லோஜிதன், கலைச்சனா, கயானன், அபிலாஸ் (கனடா), அபிலேஸ் (கனடா) ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியை 19.10.2005 இன்று புதன்கிழமை இல.620 கொக்காவில் துணுக்காயில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று மதியம் 12.00 மணியளவில் பூதவுடல் தேறாங்கண்டல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக்கிரியை நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்:-
**கி. அமலன்**
**மருமகன்**
த.பொ.மே.நிறுவனம்
துணுக்காய்.
(சி-13079)

# உடுவே தம்மாலோக தேரரிடம் ஆதரவு கேட்கிறார் மகிந்த ராஜபக்ஷ

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் தன்னை ஆதரிக்குமாறு ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரரை மகிந்த ராஜபக்ஷ நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்தார்.

உடுவே தம்மாலோக தேரர் தங்கியிருந்த ஆச்சிரமத்திற்கு நேரில் சென்று மகிந்த ராஜபக்ஷ இந்த வேண்டுகோளை விடுத்தார்.

தனது ஆதரவை யாருக்கு வழங்குவதென்று ஆராய்ந்து வருவதாகவும் அடுத்த வாரமளவில் தனது முடிவை அறிவிக்கவுள்ளதாகவும் மகிந்த ராஜபக்ஷவுக்கு உடுவே தம்மா லோகதேரர் பதிலளித்துள்ளார்.

தேர்தலில் யாரை ஆதரிப்பதென்பது குறித்து முடிவெடுப்பதற்காக உடுவே தம்மாலோக தேரர் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் சந்தித்து உரையாடியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

புகைப்படத்துறையில் புதிய நுட்பங்களை உருவாக்கக் கூடிய
**Adobe Photoshop**
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
தொடர்புகளுக்கு:-வின்நெற் கணணி பயிற்சிநிலையம், டிப்போவீதி, கிளிநொச்சி. (சி.13074)

## விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள இரண்டு இஞ்சின்கள் England Lister (16hp, 12hp ) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு சுதா அரைக்கும் ஆலை புளியடிச்சந்தி விசுவமடு. (6858)

## திறப்பு விழா

(அலுவலகசெய்தியாளர்)

மருதங்கேணி வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை திறப்பு விழாஇன்று முற்பகல் 10.30 மணிக்கு வைத்தியசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

மருதங்கேணி வைத்தியசாலை வைத்திய அதிகாரி தலைமையில நடைட் பெறவுள்ளமேற்படி நிகழ்வில் துறைசார் அதிகாரிகள், பிரதேச செயலர்கள் பங்குத்தந்தையர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் மருதங்கேணி வைத்தியசாலை நலன்புரிச்சங்கத் தினர் வேண்டியுள்ளனர். (சோ)

## தவறிவிட்டது

எனது கைப்பையானது கரடிப்போக்கு பூநகரிப்பாதையில் தவறிவிட்டது. அதற்குள் குறிப்பிட்ட தொகை நிழற்படங்களும் வேறு முக்கிய பொருட்களும் உள்ளன. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி காவல்பணிமனையில் கொடுத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். *தகவல்:-* **போராளி, பொன்னாளன்**
(6420)

## புலமைப்பரிசில் பரீட்சையில் மேலும் சித்தியடைந்தோர் விபரம்

(அலுவலகசெய்தியாளர்)

ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மேலும் சில மாணவர்களது விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதன் அடிப்படையில் வவுனியா வடக்கு வேலன் குளம்அ.த.க.பா.டசாலை மாணவி கா.டேனிகா 132புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்துள்ளார். கிளிநொச்சி திருவையாறு மகாவித்தியாலயத்திலிருந்து க.துசிகரன் 139 புள்ளி, கி.சேயோன் 136புள்ளி, ப.வதுசன் 135 புள்ளி,சி.உதயவர்மன் 132 புள்ளி, வீ.சுகிர்தா 130புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்துள்ளனர். (கு)

## மோட்டார் ஊர்திகளுக்கான வரியட்டை வழங்கல்

(அலுவலகசெய்தியாளர்)

மோட்டார் ஊர்திகளுக்கான 2006ஆம் ஆண்டுக்கான வரியட்டை அடுத்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் வழங்கப்படவுள்ளது.

அந்தந்தப்பகுதி பிரதேச செயலகங்களிலேயே தமது ஊர்திகளுக்குரியவரியட்டையை பெற்றுக் கொள்ளமுடியும்.

அத்துடன் 2006ஆம் ஆண்டு வரியட்டையினை பெறவரும் ஊர்தி உரிமையாளர்கள் ஊர்தியாளர்களுக்கான தமிழீழ பதிவுப்புத்தகம்முன்னர் பெற்ற (2005) வரியட்டை வீதியில் பாவனைப்படுத்தப்படாத ஊர்திகளாயின் அவை பதிவு செய்யப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு என்பனவற்றுடன் தத்தமது புதிய குடும்பப்பதிவு அட்டையையும் தம்முடன் எடுத்து வருமாறு போக்குவரத்து கண்காணிப்புப்பிரிவினர் வேண்டியுள்ளனர். (கு)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



*கிளி/ இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை மாணவி* **ஞானசீலன் பௌகிர்தா** *ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 139புள்ளிகளைப் பெற்று சித்திபெற்றமையை வாழ்த்துவதோடு அவர் மென்மேலும் உயர்ச்சி பெற வாழ்த்துகின்றோம்.*

**இல.635,**
**இராமநாதபுரம்**
**வட்டக்கச்சி.**
(சி-13080)

வாழ்த்துவோர்
*தாத்தா,அம்மம்மா, மாமாமார்,*
*சித்திமார், சித்தப்பாமார்.*

# மாபெரும் கலைநிகழ்வு

*வெண்பிரம்பு தினத்தை முன்னிட்டு இனிய வாழ்வு இல்ல மாணவர்களினால் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மண்டபத்தில் 19.10.2005 இன்று (புதன்கிழமை) மாலை3.30மணிக்கு மாபெரும் கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.*

நடனம்,
வில்லிசை,
சங்கீதக்கச்சேரி,
கவியரங்கம்,
நாடகம்.



தமிழீழத்தின் முன்னணிப்பாடகர்கள் திரு. A.R சுகுமார்,திரு. S. வசீகரன் இவர்களுடன் இனிய வாழ்வு இல்ல மாணவர்கள், இசை ஆசிரியர்கள் பங்கேற்கும் <u>இன்னிசை கானங்கள்</u> என்பன சிறப்பாக இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வைக் கண்டுகளிக்க மாணவர்களின் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நிர்வாகத்தினர்,**
**மாணவர்கள்,**
**இனியவாழ்வு இல்லம்,**
**வள்ளிபுனம்.**
(சி.13041)


*ஒக்ரோபர் வாசிப்பு மாதம்*

***ஆசிரியர்களின் வாண்மை விருத்தியும் ஆசிரியத் தொழிற்சங்கங்களும்***

வாசியுங்கள்

# அகவிழி

*ஆசிரியத்துவ நோக்கு*

*வருடாந்தச்சந்தா ரூ.300 மட்டுமே*
*தொடர்புகளுக்கு*
**AHAVILI,3,Torrington Vvenue,colombo-7,Srilanka,**
**TEL:011-2506272 E-MAIL:ahavili @ Viluthu.org**

# எமது நாட்டு பூகம்ப நிவாரணப் பணிக்கு உலங்கு வானூர்திகளை மட்டும் அனுப்பவும்

## - இந்தியாவிடம் பாகிஸ்தான் தெரிவிப்பு

(இஸ்லாமபாத்)

**எமது நாட்டின் பூகம்பம் தாக்கிய பகுதிகளில் நிவாரணப் பணிகளுக்கு இந்தியா உலங்குவானூர்திகளை மட்டும் அனுப்பினால் போதும். அந்த உலங்குவானூர்திகளை ஓட்ட ஓட்டிகளை அனுப்ப வேண்டாம் என்று பாகிஸ்தான் அறிவித் துள்ளது. இதை ஏற்க இந்தியா மறுத்துவிட்டது.**

பாகிஸ்தானில் கடந்த எட்டாம் திகதி பாரிய பூகம்பம் ஏற்பட்டது. ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் உள்ள முஷபராபாத் உட்பட பல்வேறு நகரங்களில் ஆயிரக்கணக் கான கட்டடங்கள் இடிந்து தரை மட்டமானது.

80ஆயிரத்திற்கும் மேற் பட்டவர்கள் இதில் பலியானார்கள். இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட வர்கள் காயமடைந்து தற்காலிக முகாம்களிலும், வைத்தியசாலை களிலும் சிகிச்சை பெற்று வரு கிறார்கள். முகாம்களில் தங்கியுள் ளவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் முழுமையாக போய்ச்சேர முடியாத அளவுக்கு வீதிகள் சேதமடைந் துள்ளன.


மீட்பு நிவாரணப் பணிகளுக்கு பல்வேறு நாடுகள் பாகிஸ்தானுக்கு உதவ முன்வந்துள்ளன.

இந்தியாவும் உதவிப் பொருட் களை அனுப்பி வைத்துள்ளது.

மீட்பு நிவாரணப் பணிகளுக்கு இந்திய இராணுவத்தைச் சேர்ந்த உலங்குவானூர்திகளையும், இராணுவவீரர்களையும் அனுப்பி வைக்கத் தயாராக இருப்பதாக இந்தியா அறிவித்தது. ஆனால் இந்த உதவியை ஏற்க பாகிஸ்தான் மறுத்து விட்டது. இந்திய இராணுவத் தினரோடு இந்திய உலங்குவானூர்தி களை எங்கள் பகுதிக்கு வர அனு மதிக்க மாட்டோம் என்றும் பாகிஸ் தான் அறிவித்தது.

ஆனால் இப்போது பாகிஸ்தான் திடீர் என்று தனது நிலையை மாற்றிக் கொண்டுள்ளது. மீட்பு நிவாரணப் பணிகளுக்கான உலங்கு வானூர்தி களை மட்டும் அனுப்பி வையுங்கள், அவற்றுக்கு 'பைலட்டுகள்' வேண்டாம். இராணுவத்தினரையும் அனுப்ப வேண்டாம். நாங்களே அந்த உலங்குவானூர்திகளை ஓட்டுவோம் என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

ஆனால் பாகிஸ்தானின் இந்த யோசனைக்கு இந்தியா ஒப்புக் கொள்ளவில்லை.



பாகிஸ்தானில் ஏற்பட்ட பூகம்பத்தில் பலியானோரின் எண்ணிக்கை 80ஆயிரத்தைத்தாண்டிவிட்டது. பூகம்பத்தில் படுகாயம் அடைந் தவர்களின் புகைப்படங்கள், இஸ்லாமபாத்தில் உள்ள மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தங்கள் உறவினர்களின் புகைப்படம் இருக்கிறதா என்பதை பொதுமக்கள் பார்க்கின்றனர்.



உலகிலேயே வன்முறைஅதிகமாக நடக்கும் நாடுகளில் பிரேசில் இரண்டாவது இடத்தில் உள்ளது. முதல் இடம் வெனிசுலா கடந்த ஆண்டு 36ஆயிரம் பேர் துப்பாக்கிச்சூட்டில் பலியானோர் நினைவாக ரியோடி ஜெனிரோவில் சிலுவைகள் வைத்து பிரார்த்தனை நடத்தப்பட்டது.

## கிரேக்கத்தில் பறவைக்காய்ச்சல்

கிரேக்கத்திலும் பறவைக் காய்ச்சல்நோய் பரவியுள்ளதாக ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிரேக்கத்தின் ஏசியன் தீவு களுக்கருகில் பறவைக்காய்ச்சல் நோயினைப்பரப்பும் வைரஸ் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக கிரேக்க அதி காரிகள் கூறியுள்ளனர்.குறிப்பாக இந்த வைரஸ் அயல்நாடான துருக்கி யிலிருந்தே பரவியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

## கிரீஸ் நாட்டில் பூமி அதிர்வு

(எதெனஸ்)

கிரீஸ் நாட்டுக்குச் சொந்தமான ஏகேன் தீவுகளில் நேற்று முன்தினம் பகல் 11-45 மணிக்கு ஆறு ரிச்டர் அளவிலான பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. இதனால் பலத்த சேதம் எதுவும் ஏற்படவில்லை.

துருக்கி நாட்டில் இருக்கும் இஸ்மிர் நகரில் நேற்று முன்தினம் பூமி அதிர்ந்தது. இதன் அளவு 5.7 ரிச்டராக கணக்கிடப்பட்டு இருக்கிறது. இதனால் சேதம் ஏற்படவில்லை. இங்கு 1999 ஆம் ஆண்டில் 7.4 ரிச்டர் அளவில் பூமி அதிர்ச்சி ஏற்பட்டபோது, 17 ஆயிரம்பேர் இறந்தது குறிப் பிடத்தக்கது.

## துருக்கியில் பூமி அதிர்வு

(அங்காரா)

துருக்கியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் ஆறுபேர் காயமடைந்துள்ளனர். ரிச்டர் அளவில் இந்நிலநடுக்கம் 5.9 என பதி வாகியுள்ளது.

துருக்கியில் கடந்த சில ஆண்டுகளாக அவ்வப்போது பூகம்பம் ஏற்பட்டு வருகிறது. கடந்த 1999 ஆம் ஆண்டு அங்கு இரு தடவை ஏற் பட்ட பூகம்பத்தில் 18 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அங்குள்ள இஸ்மிர் நகரிலும் அதை அடுத்துள்ள ஏஜியான் கடற்கரைப் பகுதிகளிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் ஒரு சில கட்டடங்கள் சேதமடைந்தன. மக்கள் பீதியில் வீடுகளை விட்டு வெளியே ஓடினார்கள்.

இந்த நிலநடுக்கம் ஏற்பட்டு நான்கு மணிநேரம் கழித்து மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. முதலில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை விட இது அதிக சக்தி வாய்ந்ததாக இருந்தது. ரிச்டர் அளவில் இது 5.9 ஆக பதிவானது. வீடுகள், கட்டடங்கள் சேதமடைந்தன.

## அமெரிக்க விமானங்கள் குண்டுத்தாக்குதல் 70 ஈராக்கியர்கள் பலி; குடியிருப்புகள் தரைமட்டம்

(பாக்தாத்)

ஈராக்கில் அமெரிக்க விமானங் கள் நடத்திய குண்டுத் தாக்குதல் களில் 70 ஈராக்கியர்கள் பலியாகி யுள்ளனர். இரு கிராமங்களில் இருந்த குடியிருப்புகள் தரைமட்டமாகின.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி தெரிய வரு வதாவது; ஈராக்கின் புதிய அரசியல் கட்சிக்கு பொதுமக்கள் ஆதரவு தெரி விக்கின்றார்களா? இல்லையா என்பதை அறிவதற்காக பொது மக்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தப் பட்டது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இதற்கான வாக்குப் பதிவு இடம் பெற்றது. ஷியா பிரிவினர் இந்த அரசியல் சட்டத்துக்கு ஆதரவு தெரி வித்து வாக்களித்துள்ளனர்.

சன்னி பிரிவினர் இந்த அரசியல் சட்டத்துக்கு எதிர்ப்பு தெரி வித்து வாக்களித்துள்ளனர்.

இந்த நிலையில் சன்னி பிரி வினர் அதிகம் வசிக்கும் ரமாதி பகுதி யில் வெடிகுண்டு தாக்குதலில் ஐந்து அமெரிக்க இராணுவத்தினர் பலி யானார்கள். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்க இராணுவ உலங்கு வானூர்திகளும் விமானங்களும் ரமாதி பகுதியில் சரமாரியான குண்டு வீசின. அங் குள்ள இரு கிராமங்களில் உள்ள குடியிருப்புகள் இதில் தரை மட்டமானது. 70 பேர்பலி யானார்கள்.



தாய்லாந்தில் ஆண்டுதோறும் மழைக்காலம் முடியும்போது அதை மக்கள் உற்சாகமாகக் கொண்டாடுகின்றனர். தலைநகர் பாங்கொக்கின் கிழக்கில் உள்ள சோன்புரி மாகாணத்தில் விழாவை நேற்று முன்தினம் விவசாயிகள் வித்தியாசமாகக் கொண்டாடினர். இதில் எருமை மாடுகள் ஓட்டப்பந்தயம் நடந்தது.

## காஷ்மீரில் தீவிரவாதிகள் அதிரடி கல்வி அமைச்சர் ஸ்தலத்தில் பலி



குலாம் நபி லோனே

(சிறிநகர்)

நேற்று காஷ்மீர் பகுதியில் தீவிர வாதிகள் வீடு புகுந்து நடத்திய தாக்குதலில் ஒரு அமைச்சர் கொல்லப்பட்டுள்ளார்.

காஷ்மீர் தலைநகர் அமைச் சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் வீடுகள் அமைந்துள்ள மிகவும் பாதுகாப்பு நிறைந்த பகுதிக்குள் நேற்றுக்காலை ஒன்பது மணிக்கு மாக்சிய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் தாக்கமி வீட்டிற் குள் புகுந்த தீவிரவாதி துப்பாக்கி யால் தாக்குதல் நடத்தினார்.காவல் கடமையில் நின்ற படையினர் திருப்பித் தாக்கியதில் அத் தீவிர வாதி இறந்தார். தீவிரவாதியின் தாக்குதலில் ஒரு இராணுவ வீரரும் கொல்லப்பட்டார்.

மற்றொரு தீவிரவாதி அருகில் உள்ள காஷ்மீர் மாநில கல்வி அமைச்சர் குலாம் நபி லோனே வீட்டுக்குச் சென்று குண்டு வீசி தாக் குதல் நடத்தினார். துப்பாக்கியால் கண்மூடித்தனமாகச் சுட்டார். இதில் மந்திரி குலாம் நபி லோனே உயிரி ழந்தார். அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த மத்திய பொலிஸ் படை வீரரும் பலியானார்.

பாதுகாப்பு மிகுந்த பகுதியில் தீவிரவாதிகள் புகுந்து தாக்குதல் நடத்தியதுஅங்கு பெரும் பரபரப்பு பதற்றத்தை ஏற்படுத்தியது. உடனே அங்கு பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டனர். ஒரு தீவிரவாதி அந்தப் பகுதியில் பதுங்கி இருக்க லாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. அவரைப் பிடிப்பதில் பாதுகாப்புப் படையினர் முடுக்கிவிடப்பட்டு உள் ளனர். வெடிகுண்டு நிபுணர்களும் வர வழைக்கப்பட்டு உள்ளனர் என காஷ்மீர் பாதுகாப்பு தரப்பினர் தகவல் வெளியிட்டுள்ளது.

இதனிடையே தாக்குதல் சம்பவத் துக்கு அல்-மன்சூரியன் தீவிரவாத இயக்கம் பொறுப்பு ஏற்றுள்ளது.

## வன்முறைகளுக்கு மத்தியில் பீகார் மாநில தேர்தல்

(பாட்னா)

இந்தியாவின் பீகார் மாநிலத்திற்கான சட்டமன்ற தேர்தலில் முதலாம் கட்ட வாக்குப்பதிவுகள் நேற்றைய தினம் சில வன்முறைகளுடன் நிறைவடைந்துள்ளது.

முதலாவதாக 57தொகுதிகளிற்கு நடத்தப்பட்ட வாக்குப்பதிவில் ஒரு வாக்காளர் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார் என பீகார் தகவல்கள் தெரிவிக் கின்றன.


243 உறுப்பினர்கள் கொண்ட பீகார் சட்டமன்றத்திற்கு இவ்வாண்டில் நடைபெறும் இரண்டாவது தேர்தல் இது என்பது குறிப்பிடத்தக்கது.



# நாவிதன் வெளி ப.நோ.கூட்டுறவுக் கடையில் பாவனைக்குதவாத பொருட்கள்

**உலக உணவுத் திட்டத்தின் கீழ் நாவிதன்வெளிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகப் பொதுமக்களுக்கு விநியோகிக்க வைக்கப்பட்டிருந்த பாவனைக்கு உதவாத கோதுமை மா, சோளம், சோயா, அரிசி போன்ற உணவுப் பொருட்களை நாவிதன்வெளிப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இளங்கோ தலைமையிலான குழுவினர் நேற்று கைப்பற்றியுள்ளனர்.**

பொது மக்களுக்கு விநியோகிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த இப்பொருட்களைக் கைப்பற்றிய சுகாதார பரிசோதகர்கள் அவற்றைச் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சலிமாவிடம் ஒப்படைத்த போது இப்பொருட்களை உடனடியாக அழித்து விடுமாறு பிரதேச செயலாளரைக் கேட்டுள்ளார். இதேவேளை நாவிதன் வெளிப்பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பல சரக்குக் கடைகளில் காலாவதியான உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாகப் பொது மக்கள் முறையீடு செய்துள்ளதாகவும், இவற்றைக் கண்டறிந்து அழிக்கும் நடவடிக்கையில் பொது சுகாதார பரிசோதகர்கள் ஈடுபட்டு வருவதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.



செம்மலை மகாவித்தியாலய மாணவர்களின் நன்மை கருதி சீற் நிறுவனத்தால் ஒரு கணினித் தொகுதி அன்பளிப்பு செய்யப்பட்டது. கணினித் தொகுதியினை செம்மலை கிழக்கு கிராம அலுவலர் திருமதி வி. அமிர்தராஜினி செம்மலை ம.வி அதிபர் க.ராஜ்குமாரிடம் கையளிக்கின்றார். (படம்:- சகிலா)

## கண்டாவளை பிரதேசத்தில் காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவுகள்

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் இதுவரை காலமும் பிறப்பு, இறப்பு பதிவு செய்யாதவர்களுக்கான பதிவுகள் நாளை கண்டாவளை பிரதேச செயலகத்தில் காலை8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை இடம் பெறவுள்ளன. இதில் பதிவாளர் அலுவலகத்தைச் சேர்ந்த உயரதிகாரிகள் சமுகமளித்து பதிவினை மேற்கொள்ளவுள்ளனர். இதுவரை காலமும் பிறப்பு ,இறப்பு பதிவினை மேற் கொள்ளாதவர்களுக்கான இறுதி சந்தர்ப்பம் இதுவென பிரதேச செயலர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (14)

## ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான ஆக்கப் பொருட் கண்காட்சி

(முள்ளியவளை)

கரைதுறைப்பற்று கோட்ட பாடசாலைகளின் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் ஆக்கப் பொருட் கண்காட்சி சிறப்புற நடைபெற்றது.

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் கடந்த 13 ஆம் திக்தி காலை 9.00 மணிக்கு பள்ளி உப அதிபர் திருமதி வி.விகிர்தபாலன் தலைமையில் ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை முல்லை வலய ஆரம்ப கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அருணாசலம் ஆசிரிய ஆலோசகர் திருமதி இ.சத்தியமூர்த்தி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

கண்காட்சி மண்டபத்தினை சம்பிரதாய பூர்வமாக அருணாசலம் நாடாவை வெட்டித் திறந்து கண்காட்சியினை ஆரம்பித்து வைக்க தொடர்ந்து பெருமளவானோர் கண்காட்சியைப் பார்வையிட்டனர். இதே போன்று முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்திலும், கண்காட்சி நிகழ்வு சிறப்புற நடைபெற்றுள்ளது.

இதே போன்று முள்ளியவளை றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் பள்ளி முதல்வர் அ.தட்சணாமூர்த்தி தலைமையில். மு.ப9.00 மணிக்கு கண்காட்சி ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வுகளை அடுத்து கண்காட்சி மண்டபத்தினை முல்லை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவராசா (நிர்வாகம்) நாடாவை வெட்டித் திறந்துவைத்து, கண்காட்சியினை ஆரம்பித்து வைக்க மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொது மக்கள் எனப் பலரும் பார்வையிட்டனர். (ஆ)

## ஓய்வூதியர் சங்கம் அங்குரார்ப்பணம்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட ஓய்வூதியர் சங்கம் அங்குரார்ப்பணக் கூட்டம் கிளிநொச்சி மத்தியகல்லூரி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.

கிளி.மாவட்ட அரச அதிபர் இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற மேற்படி தெரிவு நிகழ்வில் கிளி. மாவட்ட செயலக கணக்காளர் பகுதியைச் சேர்ந்த அதிகாரிகளும், கலந்து கொண்டதுடன் இதன் போது நிர்வாகிகள் தெரிவும் இடம் பெற்றது. கிளி. மாவட்ட ஓய்வூதிய சங்க தலைவராக அ.கனகரத்தினம், துணைத் தலைவராக ஆ. யோவான் பிள்ளை செயலராக வே.மகேசன் துணைச்செயலாளராக சி.பெருமாள், பொருளாளராக ஆ. நடராசா ஆகியோரும் மூன்று நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## அடிக்கல் நாட்டல்

((முல்லைத்தீவு)

புதுமாத்தளன் றோமன் கத்தோலிக்க பாடசாலையின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த வெள்ளியன்று முற்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை அம்பலவன் பொக்கணை கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் வேங்கைத்தமிழ் ஏற்றினார். அடிக்கல்லினை உதவிக்கல்விப் பணிப்பாளர் நாகரத்தினம், பொறியியலாளர், அதிபர், பொறுப்பாளர்கள் ஆகியோர் நாட்டி வைத்தார்கள்.

## கருங்கல் அகழ்வுப் பணி தற்காலிகமாக நிறுத்தம்!

மன்னார் மாவட்டத்தில் உள்ள மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள வலயன் கட்டுக் கிராமத்தில் அமைந்துள்ள பறங்கியாற்றில் கருங்கல் அகழ்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இக் கல்லினை அகழ்வதானால் அவ் ஆறு மண்ணரிப்பு ஏற்பட்டு அக் கிராமம் வளம் குன்றி பாதிப்பிற்குள்ளாகின்றது. இதன் காரணமாக மன்னார் மாவட்டபொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் செழியன் தற்காலிகமாக கல் அகழ்வதனை இடை நிறுத்தியுள்ளார். (40)

## எதிர்கால எழில் சிறுவர் சேமிப்புத் திட்டத்தில் 400 பேருக்கு பரிசில்கள் வழங்கல்

(முல்லை)

தமிழர் புனர்வாழ்வுக் கழக சமூகப் பொருளாதார அபிவிருத்தி வங்கியினால் சிறுவர்களுக்கான "எதிர்கால எழில்" என்ற சேமிப்புத் திட்டத்தில் 400 பேருக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 13 திகதி இடம் பெற்றது.

சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி பொது முகாமையாளர் பா.சிறிஸ்கந்தராசா தலைமையில் புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பணிமனையில் ஆரம்பமான நிகழ்வில் பொதுச் சுடரினை வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் ச. கனகரத்தினம் ஏற்றினார்.

தமிழீழ தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தனும் மங்கல விளக்கினை முல்லை பங்குத் தந்தை ஜேம்ஸ் பத்திநாதர்அடிகளார், முல்லை வலய கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் அரசியல் துறை நிதிப் பொறுப்பாளர் ஆதவன், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முல்லை மாவட்டப் பணிப்பாளர் மூர்த்தி ஆகியோர் ஏற்றினார்கள்.

ஆசியுரையினை முல்லை பங்குத் தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் நிகழ்த்தினார்.

தொடர்ந்து வருகை தந்தோரினால் 400 சிறுவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

இதில் முன்பள்ளி, பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள்,, உறவினர்கள், த.பு.கழக பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

### பால் நிலை சமத்துவ கருத்தரங்கு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் ஒக்ஸ்பாம் நிறுவன நிதியுதவியுடன் முல்லை உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்டு அம்பலவன் பொக்கணை, புதுமாத்தளன் ஆகிய இடைத் தங்கல் முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஆண், பெண் இரு பாலாருக்கும் பால் நிலை சமத்துவ கருத்தரங்கு இடம் பெற்றது. கடந்த 11, 13 ஆகிய திகதிகளில் பெண்கள் குழுத் தலைவியின் ஒழுங்கு படுத்தலுடன் காலை 10.30 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரையும் பால் நிலை சமத்துவ கருத் தூட்டலினை ஒக்ஸ்பாம் நிறுவனத் திட்ட அலுவலகர் தேவா, செல்வி சமந்தா ஆகியோர் வழங்கின்.

### செயலமர்வு

(உடையார்கட்டு)

உலக உணவுத் திட்ட செயலமர்வு கடந்த 13 ஆம் திகதி உடையார்கட்டு பாடசாலையில் 9.00 மணிக்கு, உலக உணவுத் திட்ட அதிகாரிகளால் மேற் கொள்ளப்பட்டது.இச் செயலமர்வில் எட்டுப் பாடசாலை அதிபர்கள், கிராம அலுவலர்கள, சமையலாளர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கச் செயலாளர்கள் கலந்து கொண்டனர். இச் செயலமர்வில் உலக உணவுத் திட்ட உணவு விநியோகத்தை வளப்படுத்தல், உணவை எவ்வாறு வழங்கலாம் என்று செயல் முறை விளக்க மளிக்கப்பட்டது.

### கலந்துரையாடல்

சுனாமியினால் பாதிக்கப்பட்ட செல்வபுரம் கிராம மக்களுக்கான நிரந்தர வீடுகள் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று பி.பகல் 2.00 மணிக்கு செல்வபுரம் யூதா கோயில் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் செல்வபுரத்தில் உள்ள அனைத்து மக்களையும் கலந்து கொண்டுகருத்துக்களை வழங்கியுதவுமாறு செல்வபுரம் ஊரக மேம்பாட்டு தலைவர் சேதுபதி கேட்டுக் கொள்கிறார். (20)

## தம்பனை கிராமத்திற்கு மின்சார விநியோகம் வழங்குக

### கிராம வாசிகள் கோரிக்கை

(மடு)

தம்பனை கிராமத்திற்கு மின்சாரம் வழங்குமாறு இப் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்திலுள்ள செட்டிகுளம் பிரதேசத்தில் அமைந்துள்ள தம்பனைக் கிராமத்தின் ஊடாக மடு, பெரிய பண்டி விரிச்சான், சின்னப் பண்டி விரிச்சான் ஆகிய கிராமங்களுக்கு மின் விநியோகம் நடைபெற்று வருகின்றன. ஆனால் தம்பனைக் கிராமத்திற்கு இன்று வரை மின்சாரம் வழங்கப்படவில்லை.


மின்சார விநியோகம் தொடர்பாக உதவி அரசாங்க அதிபருக்கு தெரியப்படுத்தியும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் தெரிவித்துள்ளனர். (40)

## கிளி. மாவட்ட தமிழ்ச்சங்கம் நடாத்தும் திருக்குறள் மாநாடு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தால் திருக்குறள் மாநாடு எதிர்வரும் நவம்பர் இரண்டாம் மூன்றாம் நான்காம் திகதிகளில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இறுதிநாள் நிகழ்வன்று திருக்குறள் எழுத்துத் தேர்வு நாவன்மை நாடகம், நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதுடன் கலைத் தொண்டு, மக்கள் தொண்டு, தமிழ்த்தொண்டு, நாட்டுத்தொண்டு புரிந்தவர்களுக்கு பதக்கம் அணிவித்து பொன்னாடைபோர்த்தி கௌரவிக்கப்படவுள்ளன ரென கிளிநொச்சிமாவட்ட தமிழ்ச்சங்கத் தலைவர் வே.பரமநாதப்பிள்ளை தெரிவித்துள்ளார். (சோ)



வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவர்களுக்கான விடுதி திறப்பு விழா நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம் நாடாவை வெட்டி விடுதியினை திறந்து வைப்பதனைப் படத்தில் காணலாம். (படம்:- ஆறு.சுபாஸ்கரன்)

# காங்கேசன்துறை துறைமுகத்தை சர்வதேசதரத்திற்கு அபிவிருத்தி செய்ய நெதர்லாந்து அரசு உதவி

-யாழ். சென்றநெதர்லாந்து தூதுவர் தகவல்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.காங்கேசன்துறை துறைமுகத்தை சர்வதேசதரத்திற்கு அபிவிருத்திசெய்வதற்காக நெதர்லாந்து அரசாங்கம் உதவிகளைவழங்க முன்வந்துள்ளது.**

காங்கேசன்துறையை சர்வதேச தரத்திலான நவீன வசதிகள் கொண்ட ஓர் துறைமுகமாக அபி விருத்தி செய்வதன் மூலம் யாழ்.குடாநாட்டுக்கும் ஏனைய நாடுகள் மற்றும் பிரதேசங்களுக் கிடையேயான நேரடி வர்த்தகத் தொடர்புகளை விருத்தி செய்வதே இந்த துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கமாகும்.

இதற்காகபல கோடிரூபாய்களை வழங்கி உதவி செய்ய நெதர்லாந்து அரசாங்கம் தயாராகவுள்ளது என அண்மையில் யாழ்.குடாநாட்டுக்கு வருகைதந்த நெதர்லாந்துத் தூதுவர் கூறியுள்ளார்.

குறிப்பாக இத்துறைமுகத்தில் களஞ்சியப்படுத்தல் வசதிகள் கப்பல் கட்டுவதற்கான வசதிகள் என்ப வற்றை விருத்திசெய்யவும் தொழில் நுட்பவசதிகளைப் பயன்படுத்தி பொருட்களை ஏற்றி இறக்கும் பணி களை மேற்கொள்ளவும் திட்டமிடப் பட்டுள்ளது. (33)

# வடிகால் சுத்தம்செய்யாததால் சுகாதாரச் சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் மணிக்கூட்டுக் கோபுர வீதியின் ஓரமாக உள்ள கழிவு நீர் வடிகால் நீண்ட காலமாக சுத்தம் செய்யப்படாத நிலையில் உள்ளதால் இப் பகுதியில் பெரும் சுகாதாரச் சீர் கேடு ஏற்பட்டுள்ளது.

யாழ்.நகரத்தின் சகல பிரதே சங்களில் இருந்தும் வந்து சேர்கின்ற கழிவு நீரினையும் ஏனைய திரவக் கழிவுகளையும் பண்ணைக் கடலுக் குள் பாய்ச்சும் பிரதான வடிகால் களுள் ஒன்றான இந்த வடிகால் யாழ்ப்பாணப் பிரதான பொலிஸ் நிலையப் பகுதியால் செல்கிறது.

இதனால் இவ்வடிகாலினுள் இறங்கி சுத்தம் செய்யும் பணிகளை மேற்கொள்வதில் பொலிசாரின் பாது காப்பு கெடுபிடிகள் பலவற்றை எதிர்கொள்ள வேண்டிய நிலை இருப்பதன் காரணமாகவே இவ்வடி காலினை யாழ்.மாநகரசபையினர் உரியகாலத்தில் சுத்தம் செய்யாது ள்ளனர்.

இதன்காரணமாக இவ்வடி காலினுள் கழிவு நீர்தேங்கிநின்று துர்நாற்றம் வீசுவதுடன் நுளம்புகளின் பெருக்கமும் அதிகமாகக்காணப் படுகிறது.

இந்தக் கழிவுநீரின் தேக்கத்தால் இச் சூழலில் உள்ள நிலத்தடி நீர் மாசடையும் அபாயமும்உள்ளது என்று சுற்றுச் சூழல் அதிகாரிகள் எச்சரிக் கையும். விடுத்துள்ளனர். (33)

# உள்ளூர் அமைப்புக்களின் பிரதிநிதிகளே தேர்தல் கண்காணிப்புப் பணிக்கு அமர்த்தப்படுவர்

-பவ்ரல் அமைப்பின்யாழ். இணைப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தேர்தல் கண் காணிப்புப் பணிகளை மேற் கொள்வதற்கான கண்காணிப் பாளர்கள் உள்ளூர் அமைப்புகளில் இருந்தே தெரிவு செய்யப்படுவர் என்று யாழ்.மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்புப் பணிகளைப் பொறுப் பேற்றுள்ள பவ்ரல் அமைப்பின் யாழ். மாவட்டஇணைப்பாளர் நிர்மானுஜன் கூறியுள்ளார்.

எதிர்வரும் சனாதிபதித்தேர்தல் வாக்கெடுப்புகள் யாழ்.மாவட்டத்தில் நீதியான முறையில் நடைபெறு கிறதா? என்பதை உறுதிசெய்யும் இத்தேர்தல் கண்காணிப்புப் பணி களுக்காக யாழ்.மாவட்டத்திலுள்ள சிவில் அமைப்புக்களினைச் சேர்ந்த 1242 பேர் தேர்தல் கண் காணிப்புப் பணிகளுக்காக தெரிவு செய்யப்படவுள்ளனர் என்று தெரிவித் துள்ள பவ்ரல் அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பாளர் நிர்மானுஜன் இவ்வாறு தெரிவுசெய்யப்படுகின்ற 1242 தேர்தல்கண்காணிப்பாளர் களுக்கும் தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்கான விசேட பயிற்சிகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன என்றும் கூறியுள்ளார். (33)

# இயல்பான கடற்றொழிலுக்கு அனுமதிக்கும்வரை பாதிப்பை ஈடுகட்ட நிவாரணம் வழங்கவேண்டும்

-யாழ்.அரசஅதிபரிடம் தென்மராட்சி கடற்றொழிலாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கடற்படையின் பாது காப்பு வலயகெடுபிடிகளால் பாதிக்கப் பட்டுள்ள தென்மராட்சிக் கடற் றொழிலாளர்கள் தமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை ஈடுசெய்யும் வகையில் நிவாரண உதவிகளை தமக்கு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடற்கரையோர பாதுகாப்பு வலய நடைமுறை, பாஸ்கெடுபிடி, ஆழ் கடல் மீன்பிடித்தடை, கடற்பாதுகாப்பு வலயகெடுபிடி எனப் பல்வேறு விதமாகவும் கடற்படையினரது கெடு பிடிகளால் தாம் சுயமாக தொழில் செய்து வாழமுடியாதவாறு பாதிக் கப்பட்டுள்ளமையால், தமது குடும் பங்கள் வறுமையால் வாழுகின்ற மையைச் சுட்டிக்காட்டியே மேற்படி கோரிக்கையை விடுத்துள்ள தென் மராட்சி கடற்றொழிலாளர்கள்.

தமது இயல்பான தொழில் நடவடிக்கைகள் உறுதிசெய்யப்படும் வரை தமது வறுமை நிலையைப் போக்க நிவாரண உதவிகளை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கோரி யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷிற்கு மகஜர் ஒன்றையும் வழங்கியுள்ளனர். (33)

-தென்மராட்சிப் பகுதியில்-

# உயர்பாதுகாப்பு வலயத்தால் 10 பாடசாலைகள் முடக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சியில் தொட ர்ந்தும் நடைமுறையில் உள்ள இராணுவ அதிஉயர்பாதுகாப்பு வலய நடைமுறைகளால் பத்து பாடசாலை கள் இயங்க முடியாத நிலையில் முடக்கமடைந்துள்ளதாக தென் மராட்சி வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகள் கவலை தெரிவிக் கின்றனர்.

இதன் காரணமாக தென்மராட்சி யைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்களது கல்வி எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் மேலும் கவலை தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ள 67 பாடசாலைகளில் பத்துப் பாடசாலைகள் இராணுவ அதி உயர்பாதுகாப்பு வலயங்களுள் முடக்கிவைக் கப்பட்டிருப்பதால் தற் பொழுது இங்குள்ளன. 57 பாட சாலைகள் மட்டுமே இயங்கி வருகின்றன.

இவ்வாறு இயங்கிவரும் 57 பாட சாலைகளில்90வீதமானவை கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் அரச புறக்கணிப்புகளால் பெரும் வளப்பற்றாக்குறையுடன் இயங்கி வருவதால் இவற்றின் மூலமும் மாண வர்கள் திருப்திகர மான கல்வியை பெறமுடியவில்லை. இதன் காரண மாக தென்மராட்சியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்களது கல்வி எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ள தாகஅவர்கள்மேலும் சுட்டிக்காட்டு கின்றனர். (33)

# படையினர் பாதுகாப்பற்ற முறையில் மின்சாரம் பெறுவதால் மக்கள் அச்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரியாலை நெடுங்குளம் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறி லங்கா இராணுவத்தினர் பாதுகாப்பற்ற முறையில் மின்சாரம் பெறுவதனால் அப்பகுதி மக்களது இயல்பு வாழ்வுக்கு அது பெரும் அச்சுறுத் தலாக உள்ளது.

குறிப்பாக பிரதான மின்கம்பத் திலிருந்து நெடுங்குளம் இராணுவ முகாமுக்கும் அதனை அண்டியுள்ள பாதுகாப்பு வலயங்களுக்கும் மின் சாரத்தைப் பெறுவதற்காக இரா ணுவத்தினர் பயன்படுத்தியுள்ள மின் கம்பிவயர்கள் உயரமுத்த மின் சாரத்துக்கு தாக்குபிடிக்க முடியாத தரத்தை உடையனவாகக்காணப் படு வதுடன். இவ்வயர்கள் பொது மக்களது வாழ்விடங்களை அண்டி யுள்ள பச்சை மரங்களைத் தொடக்க கூடியவாறாகவும் கைகளுக்குக் கூட எட்டக் கூடியவாறு தாழ்வாகவும் இணைக் கப்பட்டுள்ளன. இது இப் பகுதி மக்களின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றபோது படையினர் அதனைக் கவனத்தில் கொள்ளாது தொடர்ந்தும் மின் பெற்று வருகின்றமை குறித்து மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை படையினரது அச மந்தத்தால் குருநகரில் இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கிப் பலி யானமை தெரிந்ததே. (33)



*திருகோணமலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ரனில் விக்கிரமசிங்கவின் பிரச்சாரக் கூட்டத்தில் சிங்கள இளைஞர் ஒருவரிடமிருந்து பொலிசாரால் கைப்பற்றப்பட்ட பேனா வடிவிலான பிஸ்டலையே படத்தில் காண்கிறீர்கள்.*

# அச்சகத்திற்கு தீ வைத்ததற்கு அரசாங்கமே பொறுப்பு

ஐ.தே.கட்சி கண்டனம்

(கொழும்பு)

சண்டேலீடர் பத்திரிகை அச்சகத் திற்கு தீ வைத்த சம்பவத்திற்கு அர சாங்கமே பொறுப்பு என ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது.

அரசாங்கத்தின் தவறுகளைச் சுட்டிக்காட்டும் ஊடகங்களைத் தாக்கு வதும் தவறுகளை மூடிமறைக்கும் ஊடகங்களை அரவணைப்பதும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் பொதுவான செயலாகும் என தெரிவித்துள்ள ஐ.தே கட்சி இச் சம்பவத்தை பலமாகக் கண்டிப் பதாகவும், அத்துடன் இச் சம்பவத் துடன் தொடர்புடையவர்களை உடன் கைது செய்து ஊடகங்களின் பாது காப்பை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுள்ளது.

கடந்த ஒன்றரை வருடங்களாக சுதந்திர ஊடகங்கள் இவ்வாறு தாக்கப்பட்டுக் கொண்டே வரு கின்றன. பல ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். சண் டேலீடர் ஐ.தே கட்சிக்கு ஆதரவாக செயற்படவில்லை எந்தக் கட்சியில் தவறுகள் உள்ளதோ அந்தக் கட்சி யைச் சுட்டிக்காட்டியே செய்தியை வெளியிடுகிறது அந்த வகையில் அரசின் பக்கம் அதிக தவறுகள் இருப்பதையே அது இப்போது காட்டு கிறது. அதைப் பொறுக்க முடியாத அரசாங்கம் இவ்வாறு தாக்குதலை நடத்துகிறது என ஐ.தே.கட்சியின் குரு நாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சத்சிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

# ஒன்பதாயிரம் மூக்குக்கண்ணாடிகளை இலவசமாக வழங்கிய நலவாழ்வு நிறுவனம்

நலவாழ்வு அபிவிருத்தி நிறு வனத்தினால் மட்டக்களப்பு- அம் பாறை மாவட்டங்களில் கடல் கோளி னால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு நடாத்திய இலவச கண்சிகிச்சை மூலம் 9000 இற்கும் மேற்பட்ட மூக் குக் கண்ணாடிகள் இலவசமாக வினியோகிக்கப்பட்டுள்ளதாக நல வாழ்வு இலங்கை கண் அள வியலாளர்களின் தலைவர் ஜே.கேசவரூபன் தெரிவித்தார். மேலும் இரண்டாவது தடவையாக நேற்று ஆரையம்பதி சிவாவித்தியால யத்திலும், இலவசகண்சிகிச்சை முகாம் இடம்பெற்றது. இதில் 500இற்கும் மேற்பட்டோர் சிகிச்சை களைப் பெற்று இலவசமாக மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொண்டனர்.

ஆரையம்பதி செல்வா நகரில் இடம் பெற்ற இந்தக் கண்சிகிச்சை முகா முக்கு வைத்திய நிபுணர்களான லீ.ஐ.வி.தர்சி, ரூரல் ஆகியோரும், கண்அளவையாளர்களான ஜே.கேச வரூபன், எஸ். சிறிராமன், கே.பிரசாந், டி.கிருஸ்ணவேணி ஆகியோரும் கலந்து கொண்டு சிகிச்சைகளை வழங்கினர்.

# போராட்டத்தின் மீதான பற்றுறுதியே தமிழரின் உரிமையை வென்றெடுக்கும்!

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான செயற்பாடுகள் எந்தக் கட்டத்தில் உள்ளன? இதில் முன்னேற்றம் காணக் கூடியதான எத்தகைய சமிக்ஞைகளும் தென்படுகின்றனவா? அதாவது யுத்த நிறுத்த உடன்பாடு எந்தளவிற்கு உறுதியானதாகவுள்ளது? சமாதானப் பேச்சுவார்த்தைகளும்- அரசியல் தீர்வு முயற்சிகளும் எந்தளவில் உள்ளன? என்பதே இங்கு எழுப்பப்படும் வினாவாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண வேண்டும் என்பதில் இன்று பல உலக நாடுகள் அக்கறை காட்டுகின்றன. இதில் குறிப்பாக மேற்குலக நாடுகளின் அக்கறை அதிகமானதாக உள்ளது. இந்நாடுகள் யுத்தம் நிறுத்தப்பட்டு, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காணப்பட வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. ஒரு வகையில் இந்நாடுகள் அழுத்தங்களையும் பிரயோகிக்கின்றன என்று கூடக் கூறலாம்.

இதேவேளை இந்நாடுகளின் நடவடிக்கைகளுக்கு ஏற்றவகையிலான செயற்பாடுகளில் விடுதலைப் புலிகளும் கணிசமான ஒத்துழைப்பை வழங்கி வந்துள்ளனர் என்பதை எவருமே நிராகரித்துவிட முடியாது. அதாவது யுத்தநிறுத்த உடன்பாடு, அதன்அமுலாக்கம் ஆகியவற் றுக்கு வழங்கிவரும் ஒத்துழைப்பில் இருந்து சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஒத்து ழைப்பு வழங்குவதற்குத் தயாராக உள்ளமை வரையான ஒத்துழைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆயினும் மேற்கு நாடுகளிலிருந்து சில நெருக்குதல்கள் வராமலில்லை. குறிப்பாக , சில நாடுகள் புலிகள் மீது விடுத்துள்ள தடை, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தமது நாடுகளில் வரவேற்பதில்லை என்று எடுத்துள்ள தீர்மானம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்ட முடியும். ஆனால் இவை ஒருதலைப்பட்சமானவை. அவ்வாறு இல்லாதுவிடில் விடுதலைப்புலிகள் மீதான இத்தகைய தொரு அழுத்தத்தை ஐரோப்பிய ஒன்றியம் தற்பொழுது மேற்கொண்டமைக்கான காரணம்தான் என்ன?

இலங்கை இனப்பிரச்சினை சர்வதேச மட்டத்தை எட்டியிருப்பது இனப்பிரச்சினையின் கூர்மையைவெளிப்படுத்துவதாக இருப்பினும், இப்பிரச்சினை தொடர்பான சரியான புரிதலை மேற்குலக நாடுகள் கொண்டுள்ளனவா என்பதே இன்றுள்ள முக்கியமான கேள்வியாகும். ஏனெனில் அவர்களின் நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பவையாக இல்லை. மாறாக,ஒடுக்குமுறை சக்திகளை வலுப்படுத்துபவையாகவே உள்ளன.

தமிழ் இளைஞர்கள் கடந்த நூற்றாண்டின் எழுபதுகளின் மத்தியில் ஆயுதங்களைக் கையில் எடுக்க வேண்டி வந்தமை ஏதோ சந்தர்ப்பவசத்தின் செயற்பாடுகளினால் அல்ல. அதாவது தமிழ்மொழி இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டமை, தமிழ் மக்களின் தாயகம் ஆக்கிரமிக்கப்பட்டமை, வேலைவாய்ப்பு கல்வி என்பவற்றால் புறக்கணிக்கப்பட்டமை போன்ற பல்வேறு காரணிகளும் இருதசாப்தகால சாத்வீகப் போராட்டத்தோல்வியும் ஆயுதப் போராட்டம் ஒன்றை நடத்துவதைத் தவிர வேறு வழி எதுவுமில்லை என்ற நிலையைஉருவாக்கி இருந்தது. மேலும் இதன் அவசியத்தை 1977 ஆம், 1983 ஆம் ஆண்டுகளில் தமிழ் மக்கள் மீது, கட்டவிழ்த்துவிடப்பட்ட பாரிய வன்முறைகள் தமிழ்மக்களுக்கு உணர்த்தின.. இதனால் தமிழ் மக்களும் ஆயுதப் போராட்டமே தமது விடிவிற்கான வழி என உறுதியாக நம்பினர். இதன் வெளிப்பாடே பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் போராட்டங்களில் இணையவும், ஆயுதம் ஏந்தவும் வேண்டியநிலை உருவானது.



ஆனால், தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இவ் ஒடுக்குமுறையை மேற்குலக நாடுகள் எந்தளவிற்குப் புரிந்துகொண்டன என்பது கேள்விக்குரியதே. அவ்வாறு அவர்கள் புரிந்து கொண்டிருப்பின் இனக்கலவரங்கள் மூலமும் அதன் பின்னான அரச பயங்கரவாதத்தின் ஊடும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட ஒடுக்குமுறைகளைப் புரிந்துகொண்டு இப்பிரச்சினையில் நடு நிலையானதொரு நிலைப்பாட்டை மேற்கொண்டிருக்க முடியும்.

ஆனால், இவற்றின் பின்னர் நடந்த நீண்டதொரு யுத்தமும்-தமிழ் மக்களின் பெரும் அர்ப்பணிப்பின் பின்னருமே சர்வதேச சமூகம் இனப்பிரச்சினையில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கியது. யுத்தம் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டு, இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல்தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு வந்தன.

இருப்பினும், அதன் பின்னரும் கூட இந்நாடுகள் நடுநிலையான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளனவா? என்ற கேள்வியே இன்று தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக உள்ளது. அதாவது ஒடுக்குமுறை அரசு தமக்குரிய இராஜாங்க அந்தஸ்து, வசதிகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளும் நகர்வுகள், உண்மைக்கு மாறான பிரச்சாரங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே தீர்மானங்களை மேற்கொள்வதாகத் தெரிகின்றது.


அவ்வாறு இல்லாது விட்டால் இன்று யுத்தநிறுத்த உடன்பாடு நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளமைக்கும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட முடியாமல் இருப்பதற்கும் யார் காரணம் என்பதை அவை புரிந்துகொள்ளுதல் கடினமாக இருக்க மாட்டாது. அத்தோடு ஒடுக்கப்படும் மக்களின் உரிமைக்கான போராட்டத்திற்கு எதிரான நிலைப்பாட்டையும் மேற்கொள்ளவாய்ப்பில்லை.

அதாவது பலமான நிலையிலுள்ள அரசின் ஒடுக்குமுறைக்கு பலவீனமானதொரு மக்கள் கூட்டம் தம்மால் இயன்றதொரு வழிமுறையில் பதில் அளிப்பதை இவ் அரசுகளினால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. அரசு புரியும் ஒடுக்கு முறை சிறுபான்மை இனங்களின் அடிப்படை மனிதஉரிமைகள், சனநாயக உரிமைகள், சிறுவர் உரிமைகள் என்பவற்றைப் பாதிப்பவையாக மட்டுமல்ல, அவர்களின் உயிர்வாழ்தலையே கேள்விக்குள்ளாக்குபவையாக இருந்த போதும் உலகத்தால் அவை கண்டு கொள்ளப்படவில்லை என்பதே நிதர்சனமானதாக இருந்தது.

இத்தகையதொரு நிலையிலும், உரிமைக்காகப் போராடும் மக்கள் கூட்டத்தின் மீதும், அதற்கு வழிகாட்டும் விடுதலை அமைப்பின் மீதும் அழுத்தத்தைப் பிரயோகிக்கும் வகையிலான நடவடிக்கைகளில் அவை கவனம் செலுத்துகின்றன.

இத்தனைக்கும் ஒடுக்குமுறை அரசுகள் இந்நாடுகளின் கோரிக்கைகளுக்கு, அழுத்தங்களுக்கு செவிசாய்ப்பனவாகவோ அன்றி பணிந்து போகின்றனவாகவோ இல்லை. எடுத்துக்காட்டாக சிறிலங்கா அரசு யுத்த நிறுத்தத்தை சீராக அமுல் செய்தல் வேண்டும். குறிப்பாக துணை இராணுவக் குழுக்களை கலைக்கவேண்டும்,பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை அவை காதில் வாங்கிக்கொள்வதாகஇல்லை.

சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்த உடன்பாடு ஏற்பட்ட பின்னர் வெளிநாடுகளில் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளன. சுனாமி அனர்த்தத்தின் பின்னர் உலக நாடுகளின் பெரும் முயற்சியினால் பொதுக்கட்டமைப்பு ஒன்றும் ஏற்பட்டது. ஆனால் இவற்றால் என்ன பயன்?



தமிழ் மக்களுக்கு இவற்றால் பயன் ஏதும் கிட்டவில்லை. யுத்தநிறுத்தம் அமுலில் இருந்தும் தமிழ் மக்கள் தமது இயல்பான வாழ்க்கை முறைக்குத் திரும்ப முடியவில்லை. அவர்களுக்கு யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு நிவாரணம் கிட்டவில்லை. அவர்களின் அரசியல் உரிமைகள் கிடைக்கப்பெறவில்லை.

இதேபோன்றே சுனாமிப் பேரலைகள் தாக்கிய பின்னரான புனரமைப்பிற்கான பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டும் பயன் இல்லை. ஏனெனில் அது அமுலாக்கம் செய்யப்பட்டதாக இல்லை. இவையாவும் ஆட்சியாளர்களினால் ஏற்படுத்தப்பட்ட முட்டுக்கட்டைகளினாலேயே அமுலாக்கம் செய்யப்படவில்லை என்பது அனைவருக்கும் தெரிந்ததொன்று.

இது மாத்திரமன்றி தற்பொழுது பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என மேற்கு நாடுகள் அடிக்கடி வலியுறுத்தி வருகின்றன.ஆனால் சிறிலங்கா ஆட்சியாளர்களில் யாருடன் பேசுவது? அதாவது சனாதிபதி சந்திரிகாவுடன் பேசுவதா? அன்றி பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் பேசுவதா?

அடுத்ததாக எதைப்பற்றிப் பேசுவது? யுத்தநிறுத்தத்தைப் பற்றிப் பேசுவதா? அரசியல் தீர்வு பற்றிப் பேசுவதா? இவற்றில் அரசாங்கத் தரப்பில் உள்ளோரிடத்தில் ஒத்த கொள்கை ஏதாகிலும் உண்டா? இக்கேள்வியானது தேர்தல் சமயத்தை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்படும் ஒன்றல்ல அடிப்படையிலேயே சிங்கள ஆட்சியாளர்களிடம் /அரசியல்வாதிகளிடம் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஒருமைப்பாடானதொரு நிலைப்பாடு இல்லை.

இவையாவும் புரிந்துகொள்ளப்படாமலே ஒடுக்கப்பட்ட நிலையிலுள்ள தமிழ் மக்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க முற்படுகின்றனர். அன்றி சிறிலங்கா அரசாங்கத்தின் இராஜதந்திர செயற்பாடுகள் மற்றும் பிரச்சாரம் என்பவற்றின் காரணமாக உணரப்படாமல் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றனவா?


உலகில் நடந்த விடுதலைப் போராட்டங்கள் யாவற்றின் போதும், ஒடுக்குமுறைகளுக்கே பெரும்பாலான உலக நாடுகளின் அங்கீகாரமும், ஆதரவும் கிடைக்கப்பெற்றுள்ளமை வரலாறு. கெடுபிடி யுத்தகாலத்தில் ஒடுக்கப்பட்டோருக்கான ஆதரவு எதிரியின் நண்பனுக்கு எதிர் என்ற ரீதியில் கிடைக்கப்பெற்றாலும் அவை வெளிப்படையானவையாகவோ, பலமானவையாகவோ இருந்ததில்லை.

ஆனால், ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடி வெற்றி கண்ட மக்கள் தமது வெற்றியின் மூலதனமாக எப்பொழுதும் போராட்டத்தின் மீதான தமது உறுதியையும், பற்றுதலையும் கொண்டிருந்தமையே வெற்றிக்குக் காரணமாகும். அத்தோடு, வெற்றி உறுதிப்படுத்தப்படும் வேளையிலேயே சர்வதேச அங்கீகாரமும் இணைந்து வந்துள்ளமையே வரலாறாகும்.

ஆகையினால் தமிழ் மக்கள் தற்பொழுது வெளிப்படுத்தும் போராட்டத்தின் மீதான பற்றுறுதியும், வெளிப்படுத்தும் எழுச்சியுமே அவர்கள் மீதான ஒடுக்குமுறையை உடைத்தெறியவும் எமது போராட்டத்தின் மீதான அழுத்தங்களைத் தாண்டி வெற்றிபெற வாய்ப்பளிப்பதாக இருக்கும்.

தமிழ் மக்கள் தமது உரிமைகள் குறித்து மிகவும் தெளிவான புரிதலைக் கொண்டவர்களாகவே உள்ளனர். இதற்கான எத்தகைய அர்ப்பணிப்புக்களும் அவர்கள் செய்யத்தயாராகவுள்ளனர். கடந்த காலத்தில் இதனைச் செய்துமுள்ளனர். ஏனெனில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமானது நியாயப்பாடானதும், தார்மீகரீதியில் பலம் மிக்கதும் ஆகும். ஆகையினால், இப்போராட்டம் பெறும் வெற்றியை உலகம் அங்கிகரித்தே ஆக வேண்டியிருக்கும். ⓪

- ஜெயராஜ்




## 10.10.2005 16.10.2005

**10**

□ தாயக விடுதலைப் போரில் வீரச்சாவடைந்த முதல் பெண் மாவீரர் 2ம் லெப். மாலதியின் 18ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகளும் தமிழீழ பெண்கள் எழுச்சிநாள் நிகழ்வுகளும், தமிழீழமெங்கும் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றன.



□ சிறிலங்காவின் அனைத்துத் துணைப் படைகளும் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே கலைக்கப்பட்டுவிட்டன என்று சிறிலங்கா இராணுவத்தளபதி சாந்தகொட்டேகொட சிறிலங்கா இராணுவத்தின் 56ஆம் ஆண்டு நிகழ்வையொட்டி இடம்பெற்ற தலைமையக நிகழ்வில் கலந்து கொண்டு தெரிவிப்பு.



□ அம்பாறை மாவட்டம் பொத்துவில் நகரில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக்கொலை.

□ முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை தொடர்பாக தமிழ் வர்த்தகர் ஒருவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கைது.

□யாழ்.குடாநாட்டில் இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்களினலும், சமூக வன்முறைச் சம்பவங்களினதும் பின்னணியில் சிறிலங்காப் படையினரும், பொலிசாருமே உள்ளனர் என்று யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி. இளம்பரிதி இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான பிரதித் தலைவர் ஜோனை பளையில் இருக்கும் யாழ்.மாவட்ட அரசியல் துறைச்செயலகத்தில் சந்தித்துப் பேசிய போது தெரிவிப்பு.

□ வடக்கு கிழக்கில் உலக உணவுத்திட்டத்தின் கீழ் நடைபெற்றுவரும் வேலைத் திட்டங்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வழங்கி வரும் ஒத்துழைப்பிற்கு உலக உணவுத்திட்டத் தலைமையகப் பணிப்பாளர் போல் கைற்றிகிரிஸ்றோ பசன் நன்றி தெரிவித்துள்ளார். தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களை கிளி நொச்சியில் சந்தித்து கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவித்தார்.



□ வவுணதீவில் போராளிகளின் வாகனத் தொடரணி மீது தாக்குதல் நடத்த முற்பட்ட சிறிலங்கா இராணுவ புலனாய்வுத்துறையினரும் அவர்களுடன் சேர்ந்த ஒட்டுப்படைகளும் விரட்டியடிக்கப்பட்டனர். இச்சம்பவத்தில் போராளியொருவர் காயமடைந்தார்.

□ சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்க முடிவு செய்ததையடுத்து "இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் இரு அமைச்சர்கள் தமது பதவியை இராஜினாமா செய்தனர்.

□ திருகோணமலை உப்பு வெளிப்பிரதேசத்தில் உள்ள அபயபுர இராணுவ முகாம் அதிகாரி ஒருவர் சிப்பாய், ஒருவரின் துப்பாக்கிச் சூட்டிற்கிலக்காகி காயம்.

□ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சனாதிபதி வேட்பாளரான மஹிந்தராஜபக்ஷவின் படம் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகளுடன் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிற்கு உரியவாகனம் ஒன்றில் பயணம் செய்த ஆறு பேர் வெலிகம குரு பெவில சந்தியில் வைத்து பொலிசாரால் கைது.

**11**

□ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் கோப்பாயிலுள்ள அவரது வீட்டில் வைத்து உந்துருளியில் வந்தோரால் சுட்டுக்கொலை.

□ திருகோணமலை கடற்கரை வீதியில் இடம்பெற்ற இரு வெவ்வேறானகைக்குண்டுத் தாக்குதல்களில் சிறிலங்கா கடற்படைச்சிப்பாய் ஒருவர் உட்பட இருவர் காயம்.

யாழ்.நகரப்பகுதியில் சிறிலங்காப் பொலிசார் மேற்கொண்ட திடீர் துப்பாக்கிப் பிரயோகத்தினால் நகரத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. வீதியில் பயணித்துக் கொண்டிருந்த இரு இளைஞர்களை இலக்குவைத்து இத்துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டாதகத் தெரிவிப்பு.

□ தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியினுள் அனுமதியின்றிப் பிரவேசித்ததன் காரணமாக விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவின் பேரில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சப்இன்ஸ்பெக்டர் உட்பட மூன்று பொலிசாரை மீண்டும் இருவாரங்கள் தடுப்புக்காவலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்று உத்தரவிட்டது.

□ விடுதலைப்புலிகள் இயக்கத்தில்தாமாக முன்வந்து இணையவரும் வயது குறைந்த சிறார்களைப் பெற்றோரிடம் ஒப்படைத்து வரும் முயற்சிகள் திருப்தியளிப்பதாக யுனிசெப்பின் சிறிலங்காவிற்கான வதிவிடப்பிரதிநிதியாகப் புதிதாகப் பதவியேற்றுள்ள வெங்கர் பென்ஜோஅனா அம்மையார் கிளிநொச்சியில் தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசிய போது தெரிவிப்பு.

**12**

□ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் படுகொலை செய்யப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்து அக்கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்.

□ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் உந்துருளியில் வந்த இனந்தெரியாதோரால் சுட்டுக் கொலை.

□ வவுனியா மன்னார் வீதியிலுள்ள சிங்களப் பிரதேசசபைக்கு முன்னால் அமைந்துள்ள வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் கைக்குண்டு வீச்சு.

□ மன்னார் மாவட்ட முன்னாள் தளபதி லெப்.கேணல் விக்ரரின் 19 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு அவர் வீரச்சாவடைந்த மன்னார் அடம் பன் நெடுங்கண்டல் கிராமத்தில் நடைபெற்றது.

□ ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் வண உடுவே தம்மாலோக தேரர்,ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதித்தலைவர் கருஜயசூரியமற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமர சிங்க ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

□ ஐ.நா. செயலாளர் நாயகத்தின் மனிதாபிமான் விவகாரம் மற்றும் அவசரகால நிவாரணப் பணிகளுக்கான இணைப்பாளர் ஜோன்எகலன்ட் மட்டக்களப்பிற்கு விஜம்.

**13**

□ இராணுவத்தோடு சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களின் கொலை வெறியாட்டம் இப்பொழுது தீவிரமடைந்துள்ளது. இதற்கு யுத்த நிறுத்த விதிமுறைகளை அமுலாக்குவதில் இரு தரப்பும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதை உறுதி செய்யாது விட்டால் நிச்சயமாக இந்த யுத்த நிறுத்த சூழலைத் தொடர்ந்து பேணுவது சாத்தியமற்றதாகவே இருக்கும் என நோர்வேயின் சிறப்புத் தூதுவரான முன்னாள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் டொன்புறுவ் ஹொவ்டேயிடம் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் வலியுறுத்தல்.

□ கிளிநொச்சிக்கு வருகை தந்த சர்வதேச மனித உரிமைகள் செயற்பாட்டாளர் இயன்மார்ட்டின் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதுடன் விடுதலைப்புலிகளின் நிர்வாகக் கட்டமைப்புக்களையும் பார்வையிட்டார்.



□ விடுதலைப்புலிகள் அமைப்பில் சுயவிருப்பத்தில் இணைய முன்வந்த 26 சிறுவர்கள் அவர்களது பெற்றோரிடம் சர்வதேச மனித உரிமைச் செயற்பாட்டாளர் இயன்மார்டின் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டனர்.

**14**

□ நாட்டைப் பாதுகாக்க முடியாத படையினரைக் கலைத்து அவர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அமரசிங்க கூறிய கூற்றைக் கண்டித்து தேசப்பிரேமிய தேசிய இயக்கம் என்ற அமைப்பு கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

□ சர்வதேச தொண்டுநிறுவனங்கள் பாதிகப்பட்ட மக்களுக்கு மேற்கொண்டு வரும் பணிகளுக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பாராட்டுத் தெரிவித்துள்ளதுடன் இப் பணிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலளிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.



□ தெஹிவளை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பொலிசார் நடத்திய திடீர் தேடுதல்களில் 50 தமிழ் இளைஞர்கள் கைது.

**15**

□ போர்நிறுத்த உடன்படிக்கையை முழுமையாகப் பாதுகாக்க நாம் எவ்வாறு கடுமையாகப் பாடுபட்டாலும் போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் சமாதான நடவடிக்கைகளையும் சீர் குலைக்கும் நோக்குடன் நிலைமைகளை சிறிலங்கா அரசுகையாளுகின்றது என்பதையே அண்மைக்கால சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவிற்கு எழுதிய கடிதத்தில் தெரிவிப்பு.

□ மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏறாவூர் களுவன்கேணியில் படையினருக்கும் இனந்தெரியாத ஆயுதபாணிகளுக்குமிடையில் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது.

**16**

□ மட்டக்களப்பு வாழைச்சேனை வீதி சுங்காங்கேணியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இனந்தெரியாத ஆயுதகுழுவினருக்குமிடையே நடைபெற்ற மோதலில் இரண்டு இராணுவத்தினரும் பொதுமக்கள் இருவரும் காயமடைந்தனர்.

□ திருகோணமலையில் மூன்று மாடிக் கட்டடத்தில் பாரிய தீ விபத்து ஏற்பட்டது.

□ யாழ்ப்பாணம், ஆரியகுளம் சந்தியில் "தமிழ் செய்தி தகவல் மையம்" அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

□ கொழும்பு முகத்துவாரத்தில் இராணுவ முகாமிலிருந்து 300 மீற்றர் தொலைவில் குப்பைத்தொட்டியில் சக்திவாய்ந்த குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

□ கட்டுநாயக்க சர்வதே விமான நிலையத்தில் கோலாலம்பூரிலிருந்து வந்த விமானத்திலிருந்து பயணிகள் இறங்கிக் கொண்டிருந்த போது விமான நிலையக் பயணிகள் இறங்கும் படிக்கட்டில் மோதியதில் இந்தோனேஷியப் பெண் ஒருவர் பலி, ஐந்து போர்காயம்.

# கள்ளவாக்குப் போடுபவர்களை கைது செய்ய ஆயிரம் பொலிஸ்குழுக்கள் அமைப்பு

(கொழும்பு)

சனாதிபதித்தேர்தலின்போது கள்ளவாக்கு போடுபவர்களைக் கைது செய்வதற்காக சுமார் 1000 பொலிஸ் குழுக்களை ஈடுபடுத்தத் தீர்மானித்துள்ளதாக பொலிஸ் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்படுபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கென நிரப்ப வேண்டிய படிவங்கள் தற்போது அச்சிடப்பட்டு வருவதாகவும், இதற்கென 55 ஆயிரம் படிவங்கள் அச்சிடப்படவுள்ளதாகவும் அந்தத் தேர்தல் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தலில் இந்தப் படிவங்கள் இவ்வளவு பெருந்தொகையாக அச்சிடப்படுவது இதுவே முதல் தடவையாகும் என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை சிறிலங்கா சனாதிபதித் தேர்தலை முன்னிட்டு அரசியல்கட்சிகளின் ஒவ்வொரு தொகுதிகளின் பிரச்சாரக் காரியாலயங்களிலும் கட்அவுட்டுகளை வைத்தல், சுவரொட்டி ஒட்டுதல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

தேர்தல்ப் பிரச்சாரக் காரியாலயங்களில் சுவரொட்டிகள் ஒட்டுதல், கட்அவுட்டுகளை வைத்தல் என்பன குறித்து சட்டமா அதிபரிடமிருந்து பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனைகள் சில வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி இந்தச் சுவரொட்டிகள், பதாதைகள், கட்அவுட்டுகள் பொதுமக்களின் பார்வைக்குத் தெரியாத வகையிலேயே வைக்க முடியும்.

தற்போது பொதுமக்களுக்குத் தெரியக் கூடிய வகையில் வைக்கப்பட்டுள்ள அனைத்து சுவரொட்டிகளையும் கட் அவுட்டுகளையும் அகற்றுமாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு அறிவித்து பொலிஸ்மா அதிபர் சுற்று நிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

தங்கள் காரியாலயங்களில் வைக்கப்பட்டிருக்கும் கட்அவுட்டுகள், சுவரொட்டிகளை அகற்றுமாறு அந்தந்த கட்சிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் அவற்றை அகற்றாவிடில் அவற்றை அகற்றப் பொலிசார் நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# சோமவன்ச நாட்டை விட்டு ஓடினாலும் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம்

**-திஸ்ஸ அத்தநாயக்க**

ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க நாட்டை விட்டு ஓடினாலும், நாங்கள் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ முடியுமானால் சனாதிபதியின் கணவரை கொலை செய்தவர்களை பிடித்து சட்டத்தின் முன் நிறுத்தட்டும் பார்க்கலாம் என்றும் அவர் சவால் விட்டார் இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலை குறித்து சோமவன்ச கவலை தெரிவித்து வருகிறார். அதேவேளை சனாதிபதியின் கணவரை யார் கொலை செய்தார்கள்? என்பதை ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவிடம் கேட்கின்றோம் ஜே.வி.பி யினர் தான் சனாதிபதியின் கணவரை கொலை செய்ததாக சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவே பல தடவைகள் கூறியுள்ளார்.

எது எவ்வாறாயினும் மனிதப் படுகொலைகளை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். படுகொலைகளை செய்வதன் மூலம் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது?என்பதே எமது நிலைப்பாடாகும். எனவே படுகொலைகள் தொடர்பான விசாரணைகளைப் பொலிசார் துரிதமாக மேற்கொள்ள வேண்டும். சனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றவுடன் ஜே.வி.பியின் தலைவர் நாட்டை விட்டு ஓட முயற்சிக்கலாம். ஆனால் நாங்கள் சர்வதேச ரீதியாக சோமவன்ச அமரசிங்கவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என்றார்.

# புலிகளின் தாயகக் கோட்பாட்டை ஐ.தே.க ஏற்கிறதா?
## தேசிய பிக்குகள் முன்னணி கேள்வி

தமிழீழ விடுதலைப்புலிகளின் தனித் தாயகக்கோட்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொள்கிறதா? என்பது குறித்து விளக்கம் அளிக்க வேண்டும் என்று தேசியபிக்கு முன்னணியின் தலைவர் தாம்பர அமில தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தாம்பர அமிலதேரர் எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இந்த கேள்வியை எழுப்பியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த ஒப்பந்தங்களை மீறி வருகின்றனர். லக்ஷ்மன் கதிர்காமர் கொலை, சிறிலங்கா புலனாய்வுத் துறை அதிகாரிகள், உளவாளிகள் உள்ளிட்ட பலரும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஒக்ரோபர் 15 ஆம் திகதி இப்படுகொலைகளுக்குக் கண்டனம் தெரிவித்திருந்த ஐ.தே.க. சில நாட்களில் இக்கொலைகளை விடுதலைப்புலிகள்தான் செய்தார்கள் என்று கூறவில்லை.

ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று ஐ.தே.க கூறி வருகிறது. ஒஸ்லோ பிரகடனமானது தமிழீழ விடுதலைப் புலிகளின் தனித் தாயகக் கோட்பாடு மற்றும் பிரிவினையை ஆதரிக்கிறது. அப்படியானால் ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழீழவிடுதலைப் புலிகளின் தனித் தாயகக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்கிறதா என்று அக்கடிதத்தில் அமில தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# “அரசியலும் புத்தமதமும்”
## ரணிலின் நூல் வெளியீடு

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் “அரசியலும் புத்த மதமும்” நூலின்இரண்டாம் பாகம் நேற்று வெளியிடப்பட்டது. பன்னிப்பிட்டிய தேவராம விகாரையில் இந்த வெளியீடு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

பிரெட்றிச் நியூமென்அறக்கட்டளையுடன் இணைந்து சரஸ்வி பதிப்பகத்தார் இந்த நூலை வெளியிட்டுள்ளனர்.

## முஸ்தபா கட்சியிலிருந்து நீக்கப்படுவார்

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரசிலிருந்து பைசர் முஸ்தபா நீக்கப்படவுள்ளார் என கட்சியின் உபதலைவர் யோகராஜன் லங்காதீப பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

இவர் அண்மையில் கட்சிக் கொள்கைகளை மீறியிருப்பதாகவும் தோட்டப் பாடசாலைகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதற்கும் தடையாக இருந்ததாகவும் அதனால் கட்சித் தலைமை இந்த முடிவுக்கு வந்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ரணிலின் கூற்றுக்கு ஜே.வி.பி கண்டனம்

சிறிலங்கா சனாதிபதியாகத் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டால் சிறிலங்கா இராணுவத்தினரால் ஜே.வி.பிக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று ஐக்கிய தேசியக்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளதற்கு ஜே.வி.பி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி. வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தக்கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் இந்த அறிவிப்பின் பின்னால் பாரிய சதி உள்ளது. 1999 ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது தான் தேர்ந்தெடுக்கப்பட்டால் சந்திரிகா குமாரதுங்கவை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பேன் என்று ரணில்கூறியதைத் தற்போது நினைவூட்டுவதாக உள்ளது.

ரணிலின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்குப் பிந்தைய கருத்துக்களை இந்த நாட்டு மக்கள் மறந்துவிடமாட்டார்கள்.

ஜே.வி.பியினரை இராணுவத்தினரிடம் ஒப்படைப்பதாக ரணில் கூறியிருப்பதை எமது கட்சி சாதாரணமான விடயமாகக்கருதவில்லை. ஆட்சி அதிகாரத்துக்கு வந்தால் ஐ.தே.க எப்படி நடந்துகொள்ளும் என்பதை வெளிப்படுத்துவதாகவே இது உள்ளது.

1980 களில்ஆட்சி அதிகாரத்தைப்பெறுவதற்காக நாட்டின் முற்போக்கு சக்திகளை எப்படியெல்லாம் ஐ.தே. க ஒடுக்கியது என்பதே நல்ல உதாரணங்கள்.சிறிலங்காவின் அறிவார்ந்த மக்கள் ரணில் விக்கிரமசிங்கவின் இத்தகைய கருத்துக்களை நிராகரிப்பார்கள். மக்களை ஒடுக்குவதற்காக ஐக்கிய தேசியக் கட்சி தனது உண்மை முகத்தை தற்போது மறைத்துக் கொண்டுள்ளது என்று அந்தஅறிக்கையில் மேலும்கூறப்பட்டுள்ளது.

# சிறைத்துறை பாதுகாப்பு ஊழியருக்கு கமாண்டோ பயிற்சி வழங்க முடிவு

சிறிலங்காவின் சிறைத்துறை பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு கொமாண்டோ பயிற்சி அளிக்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளதாக நீதித்துறை அமைச்சர் ஜோன்செனிவிரட்ன அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது:

சிறைகளிலிருந்து குற்றவாளிகளை விளக்கமறியல் நீட்டிப்புக் காக நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லும் போது நடாத்தப்படும் தாக்குதல்களை எதிர்கொள்வதற்காக இந்த கொமாண்டோ பயிற்சி அளிக்கப்படும்.

அஸ்கிரிய, கம்பஹா உள்ளிட்ட பகுதிகளில் சிறைகளிலிருந்து கைதிகள் அழைத்துச் செல்லப்பட்ட போது தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய அரசு முடிவு செய்தது.

இனிவரும் நாட்களில் சிறைத்துறை வாகனங்கள் நீதிமன்றத்துக்குச் செல்லும் போது அவற்றிற்குப் பாதுகாப்பாக கொமாண்டோ பயிற்சி பெற்ற படையினரும் உடன் செல்வார்கள்.

இந்தக் கொமாண்டோ பயிற்சியில் உயர்கல்வி பெற்ற இளைஞர்களும் இணைத்துக்கொள்ளப்படுவார்கள். நாட்டின் சிறைத்துறை பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் அதிகாரிகளும்நவீன வசதிகளைக்கொண்ட ஆயுதங்களைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் குற்றவாளிக் குழுக்கள் இந்த ஆயுதங்களைக் கையாள்கிறார்கள். இதையடுத்தே கொமாண்டோ படையினரை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த முடிவு மேற்கொள்ளப்பட்டது என்றார் அவர்.

## வாக்குச் சீட்டுக்கள் அச்சடித்த கடதாசி விசேட அடையாளங்கள் உள்ளதாம்

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் வாக்குச்சீட்டு இங்கிலாந்து அரச பிரதிநிதிகளின் விசேட கண்காணிப்பின் கீழ் பல விசேட இரகசியப்பாதுகாப்பு அடையாளங்களைக்கொண்ட 75 தொன் கடதாசிகளில் அச்சிடப்பட்டுள்ளதாக அரச அச்சகத்தினர் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் வாக்குச்சீட்டுக்களுக்கென கொண்டுவரப்பட்ட கடதாசிகள் கடந்த தேர்தல் காலங்களில் பயன்படுத்தப்பட்டவைகளை விட மாறுபட்டவை என்றும், இதில் விசேட பல அடையாளங்கள் இருப்பதனால் வாக்குச்சீட்டுக்களில் மோசடிகளைச்செய்ய முடியாதென்றும் தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார். மோசடி மேற்கொள்ளப்படுமானால் அதனை இலகுவில் கண்டுபிடிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த விசேட ரக கடதாசிகள் முதல் முறையாக சிறிலங்காவிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவித்தள்ள அந்த அதிகாரி இந்தக் கடதாசி ஒரு தொன்னின் விலை மூன்றரை இலட்சம் ரூபா என்றும் கூறினார். இங்கிலாந்து அரச பிரதிநிதிகளின் கண்காணிப்பின் கீழேயே இந்த வெள்ளை நிறக்கடதாசியில் பாதுகாப்பு அடையாளங்கள் இடப்பட்டுள்ளன.

## துப்பாக்கிச் சூடு, வாள்வெட்டு பேலியகொடவில் இருவர் பலி; மூவர் காயம்

பேலிய கொடைவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு இரு குழுவினருக்கு இடையே ஏற்பட்ட மோதலில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

பேலியகொட இம்புட்வெல்கொட பிரதேசத்திலுள்ள மரண வீட்டிற்கு வந்த நபர் வீட்டிற்கருகிலுள்ள மதுபான சாலைக்கு மது அருந்தச் சென்றபோது அவருக்கும் அங்கிருந்தவர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அந்நபர் தன்வசமிருந்த துப்பாக்கியால் வானை நோக்கிச் சுட்டுள்ளார். அவரைக் கட்டுப்படுத்தச் சென்ற நபரொருவர் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் துப்பாக்கிச் சூடுபட்டவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

இதனையடுத்து பிரதேசவாசிகளுக்கும் மரண வீட்டிற்கு வந்தவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மேதலில் வெட்டுக்காயங்களுக்கு இலக்காகி நால்வர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார். தற்போது மூவர் அங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். சம்பவம் தொடர்பில் பேலியகொட பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆழிப்பேரலை உதவியாக ஆ.அ.வங்கி இரண்டு மில்.டொலர் வழங்கியுள்ளது

இலங்கை ஆழிப்பேரலை மீளமைப்புக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி இரண்டு மில்லியன் டொலர் நிதியுதவி அளித்துள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின்சாரம் மற்றும் குடிநீர் தேவைகளை நிறைவு செய்ய இந்த நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி ஒதுக்கீடு செய் துள்ளது.

மீளமைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள், இது தொடர்பிலான பயனாளிகளை அடையாளம் கண்டு உதவுவர் என்றும் அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளுக்காக 150 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியையும் ஏழு மில்லியன் அளவிலான கடனுதவிகளையும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஏற்கனவே அளித்துள்ளது.

இந்தத் தொகையானது ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சமூகஉட்கட்டமைப்புக்கள், பொதுச் சேவைகள், வாழ்வாதாரங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


நினைவுச் சுடர்

ஐந்தாம் ஆண்டு



தாயக மண்ணில்
05.10.-2000-10.19

லெப். நிருபா-முல்லையரசி
(செல்வி மதிவதனி-சேதுபதி)

வீரவேங்கை அறிவு
(சேதுபதி-கண்ணசிங்கம்)

ஐந்து ஆண்டுகள்சென்றாலும்
இரு பிள்ளைகளை இழந்ததனால் அழுகின்றோம்
தினம் முத்தமிட்ட முகமிரண்டும் மூச்சிழந்து போச்சு
மாதமொன்று ஆக முன்னர் மாவீரரானீர்
மண்ணுக்காய் உயிர் கொடுத்தீர் மனங்களிலே- வாழ்வீர்
செந்தமிழர் சிந்தைகளில் தெய்வமாய் வாழ்வீர்கள்

தகவல்:-சகோதரி. சே. நிதிவதனி, ஆயப்பனியாளர்.புளியங்குளம். (சி. 6857)

உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர், போராளி வேங்கை.கடற்புலி



03-10-2005 முதல் 01-11-2005 வரை

SALE SALE
தீபாவளி மலிவு விற்பனை
நீங்கள் வாங்கும் சகல பொருட்களுக்கும்
விசேட கழிவு
SALE SALE
உடனே விஜயஞ்செய்யுங்கள்:

லைடன் புடைவை நிலையம்

இல. 410, ஆஸ்பத்திரி வீதி
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.
☎ 222 2381 (சி-13019)



அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

SALE ஸ்தாபனத்தாரின் SALE
தீபாவளி மலிவு விற்பனை

15.10.2005 தொடக்கம் 31.10.2005 வரை

| | | |
|---|---|---|
| சைனா சீத்தை | M | 60/= |
| சைனா பப்பிளின் | M | 55/= |
| சலஞ்சர் | M | 60/= |
| பட்டசில்க் | M | 80/= |
| சில்க் பொலிஸ்டர் | M | 60/= |
| ஸ்கேட் & பிளவுஸ் | | 400/=தொடக்கம் |
| சாறிவகைகள் | | 375/= தொடக்கம் |
| சூட்டிங் லெந் | | 200/=தொடக்கம் |
| சேட்வகைகள் | | 350/=தொடக்கம் |

அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்,
54, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி.13070)

T.P.222 2899

# அசாமில் வன்முறை 35 மலை வாசிகள் வெட்டிக் கொலை

(சவுகாத்தி)

அசாம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 35 மலைவாசிகள் வெட்டிக்கொல்லப்பட்டனர்.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது : அசாம் மாநிலத்தில் உள்ள மலைவாழ் மக்கள் இரண்டு தீவிரவாதக்குழுக்களாகப் பிரிந்து ஒருவரோடு ஒருவர் மோதி வருகிறார்கள். இவர்களுக்கு சில அரசியல் கட்சிகள் ஆதரவளித்து வருகின்றன.

இந்த இரண்டு தீவிரவாதக்குழுக்களும் மத்திய அரசுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்டன. மத்திய அரசுடன் பல கட்டங்களாகப் பேச்சுவார்த்தை நடந்துள்ளது.

இந்த நிலையில் கர்பி தீவிரவாதக் குழுவைச் சேர்ந்த சிலர் இரண்டு பேருந்துகளில் சென்று கொண்டிருந்தவேளை சிரிகிண்டிங் என்ற இடத்தில் அந்தப் பேருந்துகளை திமாசா தீவிரவாதிகள் வழிமறித்து அவர்களை வெளியே இழுத்து வெட்டிக் கொலை செய்தனர். இதன் பின் பேருந்துக்குத் தீ வைத்தனர். கொல்லப்பட்ட 23 மலைவாழ் மக்களையும் எரியும் நெருப்பில் தூக்கி வீசினார்கள். இதன் பின்னர் அந்தத் தீவிரவாதிகள் அருகில் உள்ள சர்சிம் என்ற கிராமத்துக்குள் நுழைந்தனர். அங்கிருந்த 12 பேர்களைத் துப்பாக்கியால் சுட்டும், அரிவாளால் வெட்டியும் கொன்றனர். பின் அவர்கள் தப்பிச்சென்றனர். கடந்த செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி மூன்று ஆட்டோ ஓட்டுநர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இரு தீவிரவாதக்குழுக்கள் இடையே மோதல் உச்சக்கட்டத்தை எட்டியது. இந்த மோதலில் இதுவரை இரு தரப்பிலும் 57 பேர் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான வீடுகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.



இந்தியா சென்றுள்ள ரஷ்ய இராணுவ அமைச்சர் செர்ஜிவேனோவுக்கு அணிவகுப்பு மரியாதை அளிக்க அழைத்து வருகிறார் இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி.

# எதிர்க்கட்சியாக செயற்படும் தகுதியை பாரதிய ஜனதா இழந்து விட்டது

## -காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர்

எதிர்க்கட்சியாக செயற்படும் தகுதியை பா.ஜ இழந்து விட்டது என காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

காங்கிரஸ் கட்சி செய்தித் தொடர்பாளர் ஆனந்த்சர்மா இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்; பா.ஜ. கட்சி இப்போது படுகுழப்பத்தில் உள்ளது. மத்தியில் ஆட்சியை இழந்த பின் அந்தக்கட்சியில் உட்கட்சி மோதல்கள் தலைதூக்கி வருகின்றன. மத்திய பிரதேசத்தில் பா.ஜ. க.தலைவர்யார் என்பதில் குடுமிப்பிடி சண்டை நடக்கிறது. பா.ஜ. தலைவர் அத்வானி கட்சிக்குள் உள்ளே இருந்தும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பிடம் இருந்து எதிர்ப்புக்களைச் சமாளித்து வருகிறார்.

மாநில அளவிலும், மத்தியிலும் பா.ஜ கட்சியில் கடும் குழப்பம் நிலவுவதால் எதிர்க்கட்சியாக இருக்கும் தகுதியை பா.ஜ இழந்து விட்டது. உட்கட்சி தகராறை தீர்ப்பதில் பா.ஜ. இப் போது மும்முரமாக இருப்பதால் எதிர்க்கட்சி வரிசையில் இருந்து இனிமேல் அதனால் அர்த்தமுடன் செயற்பட முடியாது. பீகார் தேர்தலில் பா.ஜ. வுக்காக பிரச்சாரம் செய்யச் சென்ற நடிகர் சத்ருகன் சின்கா பாதி பிரசாரத்திலேயே திரும்பிவிட்டார். பா.ஜ.வின் வேட்பாளர் பட்டியலில் சமூக விரோதிகள் அதிகஅளவில் இருப்பதாக அவர் குற்றம் சாட்டியிருக்கிறார். தே.ஜ என்பது ஒரு சந்தர்ப்பவாத கூட்டணி தே.ஜ. கூட்டணி ஆட்சிப் பொறுப்பில் இருந்த போதும் இதே குற்றச்சாட்டை நாங் கள் கூறியிருக்கிறோம்.

தே.ஜ. கூட்டணிக்கு சமூக விடயங்களில் அக்கறை இல்லை ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் வெளிப்படையான முகமாக தே.ஜ கூட்டணி செயற்படுகிறது என்று அவர் கூறியுள்ளார்.

# பாகிஸ்தானுக்கு இந்தியா உதவி

(புதுடில்லி)

பூகம்பத்தால் பாதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் மக்களுக்கு உதவும் வகையில் 182 தொன் நிவாரணப் பொருட்கள் அடங்கிய மூன்றாவது பாரவூர்தியை இந்தியா நேற்று முன்தினம் அனுப்பியது.

கடந்த எட்டாம் திகதி ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தால் பாகிஸ்தானில் 80 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இறந்தனர். பல கட்டடங்கள் இடிந்து ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தான் மக்களுக்கு உதவும் வகையில் கடந்த 11ஆம் திகதி 25 தொன் நிவாரணப் பொருட்களை இஸ்லாமபாத்துக்கு இராணுவ விமானம் மூலம் இந்தியா அனுப்பியது.

இதன் பின் கடந்த 16ஆம் திகதியன்று சம்ஜோத்தா அதிவேக புகையிரதம் மூலம் 68 தொன் நிவாரணப் பொருட்களை நான்கு பெட்டிகளில் இந்தியா பாகிஸ்தானுக்கு அனுப்பியது. இந்த நிலையில் மூன்றாவது முறையாக 182 தொன் நிவாரணப் பொருட்களை நேற்று முன்தினம் அனுப்பியது. இந்த நிவாரணப் பொருட்களில் கம்பளிகள், கொட்டகைகள், பிளாஸ்டிக் தகடுகள், மருந்துகள், பிஸ்கட்டுகள் உள்ளன.


## கேள்வி அறிவித்தல்-காலம் நீடிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த நலன்புரி நிலையங்களில் வசிக்கும் குடும்பங்களுக்குக் கீழ் காட்டப்படும் அளவுகளில் கிடுகு வழங்குவதற்கு இம் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களிடம் இருந்து மட்டும் பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.

| பிரதேச செயலகம் | வழங்க வேண்டிய கிடுகின் அளவு (சோடி) |
|---|---|
| கரைதுறைப்பற்று | 46,600 |
| புதுக்குடியிருப்பு | 49,800 |
| துணுக்காய் | 35,000 |
| மாந்தை கிழக்கு | 13,800 |
| மொத்தம் | 145,200 |

கேள்வி தாரர் ஒரு சோடிகிடுகின் போக்குவரத்துச் செலவு உட்பட எவ்வளவு ரூபா எனக் கேள்விப்பத்திரத்தில் குறிப்பிட்டு 21.10.2005 இற்கு முன் தலைவர்கேள்விச்சபைமுல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர்எனும் முகவரியிட்டு அனுப்பி வைக்கவும். அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு கேள்விப் பெட்டி திறக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

இதற்கான மேலதிக விபரங்களையும் இச் செயலகத்தில் 2005.10.21 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

(திரு.சி.குணசிங்கம்),
திட்டப்பணிப்பாளர்,
அரசாங்க அதிபருக்காக,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி.13078)



## அமெரிக்கன் DV 2007 லொத்தர் விசாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன



DV 2006 இற்கான எமது நிறுவனம் மூலம் விண்ணப்பித்தவர்களில் பலருக்கு விசா கிடைத்துள்ளதை மிகவும் மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

அதேவேளை DV 2007 இற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 2"x2" கலர் படம் ஒன்றுடன் எமது நிறுவனங்களுக்கு உடன் சமுகம் தரவும்.

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993

(சி-12973)



UN DP

## AMENDMENT
## REQUEST FOR QUOTATIONS

United Nations Development Programme, Sri Lanka invites Request for Quotations (RFQ) for the following and the documents could be collected from the locations given against each action:

| S. No. | Title of work | Corresponding UNDP Office |
|---|---|---|
| Lot 1 | Construction of two small bridges in Karaitivu Division, Ampara | UNDP Office, 63, Jayawardenapura, Ampara. |
| Lot 2 | Construction of drainage infrastructure in Kalmunai | UNDP Office, 63, Jayawardenapura, Ampara. |
| Lot 3 | Construction of drainage infrastructure in Manmunai South, Eraavil Pattu, and Koralai Pattu North Divisions in Batticaloa | UNDP Office, 30, Charles Velupillai Road, Batticaloa |
| Lot 4 | Construction of Agricultural Roads in Kirankulam, Batticaloa | UNDP Office, 30, Charles Velupillai Road, Batticaloa |
| Lot 5 | Construction of a 2.2 km Road in Point Pedro, Jaffna | UNDP Office, 121A Temple Road, Jaffna |
| Lot 6 | Construction of drainage infrastructure in Muthur, Trincomalee | 58 Arunagiri Road, Trincomalee |

Documents to be presented for obtaining RFQ documents:

- request letter for document on the Company's business letterhead
- ICTAD registration book (contractors are requested to be of minimum M7 level of ICTAD)

Completed documents will be accepted at the same locations from where the documents are distributed **and extended** until 3 p.m. on October 24th, 2005. Documents can also be obtained from the UNDP Programme Office, Operations Manager, 202-204 Bauddhaloka Mawatha, Colombo 7, Sri Lanka Tel : 2580691-8 Ext 279 or via email at procurement.lk@undp.org

No telephone inquiries will be solicited and UNDP reserves the right to cancel all or one of the above actions and/or reject any quotations, without assigning any reasons.

(சி-13077)

### வட பிராந்திய திணைக்களங்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி

# கிளி. வீ. அ.தி பிரதம பொறியியலாளர் அணி சம்பியன் பட்டம் வென்றது



(கிளிநொச்சி)

வவுனியா மாவட்ட செயலக கிரிக்கெட் கழகம் பத்துவருட பூர்த்தியை முன்னிட்டு வவுனியா மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட வட பிராந்திய திணைக்களங்களிற்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி கடந்த 15,16,17 ஆம் திகதிகளில் வவுனியா காமினி மகாவித்தியாலய கிரிக்கெட் திடலில் நடைபெற்றது. இப்போட்டி அணிக்கு எட்டுப் பேர் கொண்ட ஏழு பந்து பரிமாற்றங்களை உள்ளடக்கியிருந்தது. இச் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி ,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து 28 அணிகள் பங்குபற்றியிருந்தன.

இச்சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டி கிளிநொச்சி வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதம பொறியியலாளர் அணிக்கும் வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதம பொறியியலாளர் அணிக்கும் இடையில் நடைபெற்றது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிளி.வீதி அபிவிருத்தி திணைக்கள அணி ஏழு பந்து பரிமாற்றங்களை சந்தித்து 69 ஓட்டங்களைக் குவித்தது. தொடர்ந்து பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்கள அணி 25 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் கிளிநொச்சி வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதமபொறியியலாளர் அணி 44 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இவ் இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் அம்பியும், சிறந்த பந்து வீச்சாளராக சதீசும் தெரிவுசெய்யப்பட்டனர். இந்த தொடருக்கான ஆட்ட நாயகன் விருது முரளிதரனுக்கும் வழங்கப்பட்டது.

இச்சுற்றுப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்ட அணியின் விபரம். வருமாறு க.ஜெயவீரசிங்கம் (அணித்தலைவர்), வே.சிவயோகன் (உபதலைவர்) சொ.தவராசா, அ.ஞானேஸ்வரன், கா.சதீஸ், ம. அம்பிகை தனேசியன், செ.கோபிக்குமார், செ.பவேந்திரன், து.திருக்குமரன், பா.சுகந்தன், அ.யசோக்குமார்.

# மரதனோட்டப் போட்டிகளில் மயங்கி வீழ்ந்த இருவர் உயிரிழப்பு!

(பீஜிங்)

சீனத் தலைநகர் பீஜிங்கில் வருடந்தோறும் நடைபெறும் மரதன் ஓட்டப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் கலந்துகொண்ட சீன வீரர் ஒருவர் மயக்கமடைந்து வீதியில் விழுந்து இறந்துள்ளார்.

பல்லாயிரக்கணக்கான வீரர்கள் கலந்துகொண்ட இப்போட்டியின் போது இறந்தவர் நடு வீதியில் விழுந்து சுயநினைவிழந்துள்ளார். உடனடியாக அவரை வைத்திய சாலைக்கு எடுத்துச்சென்ற போதும் அவர் பரிதாபமாக உயிரிழந்து விட்டார்.

இதேபோன்று கனடாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியின் போதும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவர் போட்டித் தூரத்தை ஓடி முடித்ததும் மயங்கி விழுந்ததாகவும் அவரை உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையிளிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் அவரின் உயிர் பிரிந்துள்ளது.

சீனாவில் மேலும் ஒரு பல்கலைக்கழக மாணவன் வீதியில் மயங்கி வீழ்ந்ததாகவும் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்று 2004 ஆம் ஆண்டும் சீனாவில் இருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. அதன்போது 11 பேர் மயக்கமுற்று விழுந்ததும் நோக்கத்தக்கது.

## கங்குலி தீவிர பயிற்சி

கொல்கத்தாவில் சமீபத்தில் கங்குலி ஒரு கிரிக்கெட் பயிற்சிப் பள்ளியை தொடங்கினார். அந்தப் பள்ளி மைதானத்தில் நேற்று முன்தினம் கங்குலி 90 நிமிடம் கடுமையாக பயிற்சியில் ஈடுபட்டார்.

அவருடைய முழங்கைக் காயம் எப்படி இருக்கிறது என்பதை இன்று கிரிக்கெட் சபை மருத்துவ நிபுணர் பரிசோதித்தார். கங்குலி உள்ளூர்ப் போட்டியில் விளையாடி தன் தகுதியை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். அவர் உடல தகுதி பெற்றால் 20ஆம் திகதி முதல் நடைபெறவுள்ள துலீப் கோப்பை போட்டியில் ஆடுவார்.




# அவுஸ்திரேலியத் தொடருக்கு மே. இங் அணி வீரர்கள் தயார்

மேற்கிந்தியக்கிரிக்கெட் அணிக்கும் விளம்பர ஒப்பந்தக்காரர்களுக்கும் இடையில் பிணக்குகள் இருந்த போதும் அவுஸ்திரேலியாவுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொள்ள முன்னணி வீரர்கள் தயாராகவே இருப்பதாகப் பயிற்றுநர் பெனட் இங்கு தெரிவித்துள்ளார்.

இந்தப் பிணக்கு காரணமாக சிறிலங்காவுக்கான பயணத்தை அவர்கள் தவிர்த்திருந்தனர்.

கிங் மேலும் கூறும்போது; பிரச்சினைகள் ஒரு பக்கம் இருப்பினும் நாம் ஒற்றுமையுடன் செயற்பட்டு கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க வேண்டும் என்றார்.

1993 ஆம் ஆண்டுக்குப் பின் அவுஸ்திரேலியாவை டெஸ்ட் போட்டித் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிகொண்டதில்லை.

அவுஸ்திரேலியா தற்போது உலக பதினொருவர் அணியை துடைத்தெறிந்துவிட்டு தலை நிமிர்ந்து நிற்கின்றது. போட்டிகள் வரும் நவம்பரில் நடைபெறும்.அதற்கு முன் நான்கு நாள் பயிற்சிப்போட்டியொன்றும் நடைபெறவுள்ளது.

# கண்டாவளைப் பிரதேச முன்பள்ளிகளின் ஒருங்கிணைந்த திறனாய்வுப் போட்டி

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய ஒழுங்கமைப்பில் கண்டாவளை அபிவிருத்தி நிறுவனத்தால் நடத்தப்பட்ட கண்டாவளை பிரதேச முன்பள்ளிகளின் ஒருங்கிணைந்த திறனாய்வுப் போட்டி நேற்று முன்தினம் கிளி/தருமபுரம் மகா வித்தியாலய மைதானத்தில் பி.ப. 2.30 மணிக்கு விசுவமடு தென்னிந்திய திருச்சபை பங்குத்தந்தை இ.தேவராசா தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக தருமபுரம் ஈழவேந்தன் முன்பள்ளி முன்றலில் இருந்து முன்பள்ளிச் சிறார்களின் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்களை மைதானத்துக்கு அழைத்துச் சென்றனர். சிறார்களின் கண்ணைக் கவரும் உடற்பயிற்சி விளையாட்டு நிகழ்வுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. இதில் குடை நடனம், அஞ்சல் ஓட்டம், தாரா நடை, பந்து எறிதல், வினோத நடை எனப்பல நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.

இறுதியாக முன்பள்ளிச் சிறார்களுக்கும், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மான பரிசில் வழங்கும் நிகழ்வுகள் நடைபெற்றன. பரிசில்களை தமிழீழ அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் தங்கன், கண்டாவளை பிரதேச செயலர் சி.சத்தியசீலன், கண்டாவளை கோட்ட கல்விப் பணிப்பாளர். வீ. இராஜகுலசிங்கம் உட்பட நிகழ்வில் கலந்து கொண்ட பல விருந்தினர்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

# இந்திய அணி வீரர்களுடன் இந். கிரிக்கெட் சபை ஒப்பந்தம்

இந்திய கிரிக்கெட் அணியில் விளையாடும் ஒவ்வொரு வீரர்களும் இந்திய கிரிக்கெட் சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். இது ஒரு ஆண்டு காலத்துக்கு மட்டுமே செய்யப்படுகிறது.

தற்போது ஒப்பந்த காலம் முடிவடைகிறது. எனவே இலங்கைக்கு எதிரான போட்டி தொடங்கும் முன்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட வேண்டும். எனவே இன்று பெங்களூரில் தொடங்கும் பயிற்சியின் போது வீரர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள கிரிக்கெட் சபை திட்டமிட்டு இருந்தது.

ஆனால் தலைவர் ராவிட், முன்னணி வீரர்கள் கங்குலி, கும்ளே, லட்சுமணன், கயூப், நெக்ரா ஆகியோர் பயிற்சி முகாமில் பங்கேற்காததால் ஒப்பந்தம் ஏற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே ஒப்பந்தம் ஏற்படுத்தும் திகதியை ஒத்தி வைத்துள்ளனர். இந்தியா- இலங்கை போட்டி நடந்து கொண்டிருக்கும் போது ஏதாவது ஒரு நாளில் ஒப்பந்தத்தை ஏற்படுத்தலாம் என்று திட்டமிட்டுள்ளனர். ஒப்பந்தம் ஏற்படுத்தும் போது வீரர்கள் தரப்பில் இருந்து பல்வேறு கோரிக்கைகள் வரலாம். அதை ஆராய்ந்து தான் ஒப்பந்தம் ஏற்படுத்த முடியும்.

எனவே இது சம்பந்தமாக கிரிக்கெட் ஒப்பந்தக் குழு அணித்தலைவர் ராவிட் ,கிரிக்கெட் சபை செயலாளர் (பொறுப்பு) ரத்னாகர் ஷெட்டி, இணை செயலாளர் கவுதம் தேஷ் குப்தா ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது. பேச்சுவார்த்தையில் உரிய முடிவு ஏற்படாவிட்டால் ஒப்பந்தம் செய்வதில் தாமதம் ஆகலாம் ராவிட்டுக்கு இப்போது தலைமை பொறுப்புடன் ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் பொறுப்பும் சேர்ந்துள்ளது.

இதற்கிடையே கிரிக்கெட் சங்க தேர்தல் குறித்து இன்று டில்லி உயர்நீதிமன்றில் விசாரணை நடக்கிறது. அதில் என்ன தீர்ப்பு வருகிறது என்பதை பார்த்து விட்டு ஒப்பந்தத்தை முடிவு செய்யலாம் என கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது.

உடனடியாக ஒப்பந்தம் ஏற்படுத்தா வீட்டாலும் இலங்கைப் போட்டி எந்த பாதிப்பும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டேனி வில்லியம்ஸ், ஹாட்லி ஹரிசனுடன் டிசம்பரில் மோதுகின்றார்

எதிர்வரும் டிசம்பர் மாதம் லண்டனில் நடைபெறவுள்ள அதிபாரகுத்துச்சண்டைப்போட்டியில் முன்னாள் உலக சம்பியன் மைக்டைகனை வீழ்த்திய டேனி வில்லியம்ஸ், ஹாட்லி ஹரிசனுடன் மோதவுள்ளார்.

லண்டனில் 1993 ஆம் ஆண்டு லெனாக்ஸ் லீவிஸ் பிராங்புருனோ ஆகியோருக்கிடையில் நடைபெற்ற போட்டிக்குப்பின் வரும் டிசம்பர் பத்தாம் திகதி நடைபெறும் போட்டியே பாரிய மோதல் எனக்கூறப்படுகிறது. ஹரிசன் 2000ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் குத்துச்சண்டைபோட்டியில் தங்கப்பதக்கம் வென்றவராவார்.

இவருடன் மோதும் வில்லியம்ஸ் மைக்டைசனை வென்ற போதும் தற்போது நிலையான வீரர் என்று கூறமுடியாது எனத்தெரிவிக்கப்படுகிறது. இவர் கடந்த டிசம்பரில் நடந்த போட்டியொன்றில் தோல்வியைத்தழுவினார்.

# உலகையே மாற்றும் சக்தி படைத்தவர்; 'சானியா' விற்கு 'நியூ ஸ்டேட்ஸ் மேன்' பாராட்டு

18 - உலகையே மாற்றும் சக்தி படைத்தவர் சானியாமிர்சா என்று லண்டனில் இருந்து வெளியாகும் 'நியூஸ்டேட்ஸ் மேன்' வார இதழ் பாராட்டியுள்ளது.


இங்கிலாந்தின் மிக முன்னணி பத்திரிகையான 'டைம்ஸ்' பத்திரிகை தனது அட்டையில் சானியா மிர்சாவின் படத்தை வெளியிட்டு சமீபத்தில் கௌரவப்படுத்தியது. இந்தநிலையில் 'நியூ ஸ்டேட்ஸ் மேன்' வார இதழில் சானியா மிர்சா பற்றிய கட்டுரை ஒன்றை ஜேசன்கவுலி என்பவர் எழுதியுள்ளார். அவர் அதில் கூறியிருப்பதாவது:-

இந்தியாவின் மிகச்சிறந்த டென்னிஸ் வீராங்கனையாக சானியா மிர்சா உருவெடுத்துள்ளார். இளவயதிலேயே உலக அளவில் முன்னணி இடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளார். சர்வதேச டென்னிசில் மகாசக்தியாக உருவெடுக்கப்போகும் சானியா உலகையே மாற்றும் வல்லமை படைத்தவர். அதற்கான எல்லா திறமையும் அவரிடமுள்ளது. சானியாவால் இந்திய பெண்கள் பலர் விளையாட்டில் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர்.

பொதுவாக இந்தியாவில் பெண்கள் விளையாட்டுத்துறையில் ஈடுபடுவதை உற்சாகப்படுத்துவதில்லை. அப்படிப்பட்ட நாட்டைச் சேர்ந்த சானியா சர்வதேச டென்னிசில் 40 இடத்துக்குள் வந்துள்ள முதல் இந்தியப் பெண்ணாக இருப்பது பெரிய சாதனைதான் என்று அதில் எழுதப்பட்டுள்ளது. உலகை மாற்றக்கூடிய பத்துப் பேர் பெயரைக் குறிப்பிட்டு அதில் ஒருவராக சானியாவையும் அந்தப் பத்திரிகை பாராட்டி இருக்கிறது.

தரவரிசையில் மாற்றம்

உலக டென்னிஸ் சங்கம் நேற்று தரவரிசை பட்டியலை வெளியிட்டது. சிங்கிள்ஸ் பட்டியலில் சானியா 31 ஆவது இடத்திலிருந்து 32 ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டு இருக்கிறார். டபுள்சில் ஆறாம் இடம் முன்னுக்கு வந்துள்ளார். அதாவது 115 இடத்திலிருந்து 109 ஆவது இடத்துக்கு முன்னேறியிருக்கிறார்.



## சிந்தனைக்கு

எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 19.10.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# மகிந்தவின் கனவு!

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு யுத்த நிறுத்த உடன்பாடு விரும்பப்படாத ஒன்றாகவே உள்ளது போல் தோன்றுகின்றது. முதலில் யுத்த நிறுத்த உடன்பாடு விடுதலைப்புலிகளுக்குச் சாதகமாகவுள்ளது எனத் தெரிவித்து வந்த அவர் தற்பொழுது யுத்த நிறுத்த உடன்பாடு தேர்தல் பிரச்சாரத்திற்காக சில பகுதிகளுக்குத் தம்மைச் செல்ல முடியாது ஆக்கியுள்ளது என்கிறார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் கூற்றுக்கள் வடக்கு–கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தேர்தல் பிரச்சாரம் செய்ய முடியாத நிலையை ஏற்படுத்திவிட்டது என்பதையே வெளிப்படுத்துவதாயுள்ளது. அவ்வாறானால் யுத்த நிறுத்த உடன்பாடு இல்லாதுவிடில் மகிந்த ராஜபக்ஷவினால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்க முடியுமா?

சிலவேளை மகிந்த ராஜபக்ஷ யுத்த நிறுத்தம் இல்லாது இருந்திருப்பின் இதுவரையில் வடக்கு கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என்பது இருந்திருக்க வாய்ப்பில்லை எனக் கனவு காண்கின்றாரா தெரியவில்லை. அதாவது சிறிலங்கா இராணுவம் அவற்றை ஆக்கிரமித்திருக்கும் ஆகையினால் சகல இடங்களிலும் சென்று, சனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தைச் செய்திருக்க முடியும் எனக் கருதுவதாய் இருக்கட்டும்.

மகிந்த ராஜபக்ஷவின் கனவு நனவாகி வடக்குக் கிழக்கு முழுமையாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதியாக வந்துவிட்டதாக வைத்துக் கொள்வோம்– ஆனால் அத்தகையதொரு சூழ் நிலையிலும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் வடக்கு– கிழக்கில் தேர்தல் பிரச்சாரத்தினை நடத்த முடியுமா?

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் சிங்களத் தலைவர்கள் வடக்கு கிழக்கில் தேர்தல் பிரச்சாரம் என்பதை எப்பொழுதும் ஒரு அடையாளத்திற்கே மேற்கொண்டனர். அதிலும், சில தலைவர்களே ஓரிரு தடங்கள் வடக்கிற்கு வந்ததைத் தவிர எவரும் தொடர்ச்சியாக வடக்கிற்கு கிழக்கிற்குச் செல்வதாகவோ அன்றி பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவோ இல்லை. தற்போது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரு சனாதிபதித் தேர்தல்களின் போதும் வடக்கிற்குச் சென்றதில்லை.

இதேவேளை தமிழ் மக்களும், சிங்களத் தலைவர்கள் கூறுவதைக் கேட்க வேண்டும் என்ற ஆர்வமோ அக்கறையோ கொண்டவர்களாகவும், இல்லை. சிங்களத் தலைவர்கள் யாராவது அபூர்வமாக வந்தால் அவர்களைப் பார்ப்பதும், பேச்சுக்களைக் கேட்பதும் அவர்களுக்கு ஒருபொழுது போக்கு விடயமாக இருந்துள்ளதே ஒழிய அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்ததில்லை.


இந்நிலைக்கு சிங்களத் தலைவர்களை தமது தலைவர்களாகவோ தமது நாட்டின் தலைவர்களாகவோ தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளாததும், சிங்களத் தலைவர்களும் தமிழ் மக்களைத் தம் மக்களாகக் கருதாமையுமே காரணமாகும். இதே வேளை வடக்கு –கிழக்கைச் சிங்களவர்கள் தமது ஆளுகைக்கு உட்பட்டதாகக் கொள்வதைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாமையும் இந்த நிலைக்குக் காரணமாகும்.

ஆகையினால் சிங்களத் தலைவர்கள் வடக்கு கிழக்கிற்குத் தேர்தல் பிரச்சாரத்திற்குச் செல்லாததிற்கு யுத்தமோ, யுத்த நிறுத்த உடன்பாடோ அடிப்படையில் காரணமல்ல. இரு வேறுபட்ட மக்கள் இருவேறுபட்ட பிரதேசம் என்ற உணர்வும், வெளிப்பாடுமே காரணமாகும். அவ்வாறில்லாவிடில் மகிந்த ராஜபக்ஷ பிரச்சாரம் செய்ய விரும்பினால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தனது பிரச்சாரத்தை மேற்கொள்ளலாமே.

யுத்தநிறுத்த உடன்பாடு மோதலைத் தவிர்த்துள்ளதால் இராணுவத்தின் பாதுகாப்புடன் பிரச்சாரத்தை மேற்கொண்டதற்கு என்ன இடையூறு உள்ளது. அதாவது விமானத்தின் மூலம் பலாலி வந்து இராணுவத்தினரதும், பொலிசாரினதும், பாதுகாப்புடன் கூட்டங்களை நடத்தலாமே. ஆனால் மகிந்த ராஜபக்ஷ ஏன் அதனைச் செய்யவில்லை? யார் அதற்குத் தடைவிதித்தது? ஆனால் அதற்கு ராஜபக்ஷ தயாராக இல்லை.

ஏனெனில் மகிந்த ராஜபக்ஷ கூட்டம்ஒன்றை நடத்துவாரானால் அதில் மக்கள் கலந்து கொள்வார்களா? கலந்து கொண்டாலும், மகிந்த ராஜபக்ஷவிற்கு அவர்கள் வாக்களிப்பார்களா? ஏனெனில் மகிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பேன் எனக் கூறுவதைக் கேட்டு வாக்களிக்கத் தமிழ் மக்கள் அத்தனை சிறு பிள்ளைகளா?

உண்மையில் மகிந்த ராஜபக்ஷ வடக்கு கிழக்கில் தேர்தல் பிரச்சாரம் செய்வதற்கு யுத்த நிறுத்தம் தடையல்ல. குறைந்தது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலாவது பிரச்சாரம் செய்ய முடியும். ஆனால் செய்ய இயலாமைக்கு அவருக்குத் தடையாக உள்ள விடயம் அவரது கொள்கைகளும், அவரது அரசியற் கூட்டணியுமே. தமிழருக்கு எதுவும் தரப்போவதில்லை எனக்கூறும் அவர்கள் தமிழர் மத்தியில் பிரச்சாரம் செய்து காணப்போவதுதான் என்ன?




# தமிழர் தொடர்பான நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட வேண்டும்

– திருமலை தமிழ்மக்கள் பேரவைத் தலைவர்

(திருமலை)

தமிழர் தொடர்பான தனது நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி உடனடியாக வெளியிட வேண்டும் என்று திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் கையெழுத்திட்டு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சனாதிபதித் தேர்தலில் பேரினவாதக் கட்சிகள் இரண்டுமே தமிழ் மக்களின் ஆதரவைக்கோரி நிற்கின்றன. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கடந்தகாலச் செயற்பாடுகளை வைத்துப் பார்க்கும்போது, இருவருமே ஒரே மாதிரியானவர்கள் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை.

தற்போதைய நிலையில் சமாதானத்திற்கு எதிரான சக்திகளாக உள்ளவை தமிழ் ஆயுதக்குழுக்களே. மாறி மாறி வரும் அரசாங்கங்களுக்கு ஆதரவை வழங்குவதன் மூலம், இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதே அவர்களின் உள்நோக்கமாகும்.

இன்றைய சூழ்நிலையில் இனவாத சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ளவர்கள் எதிர்காலத்தில் ஆட்சி மாறினால் அவர்களுடன் சேர்ந்தும் தமிழ் தேசியத்தைக் காட்டிக் கொடுக்க தயங்கமாட்டார்கள். இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி இது தொடர்பாக என்ன நிலையைக் கொண்டுள்ளது. எதிர்காலத்தில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கி தமிழ் தேசியத்திற்கு எதிராகவும், தமிழ் பேசும் மக்களுக்கு எதிராகவும் இராணுவ ரீதியில் இவர்கள் இயங்குவதை ஐக்கிய தேசியக்கட்சி ஆதரிக்குமா? என்பதனை உடனடியாக வெளிப்படுத்த வேண்டும்.

அது மட்டுமின்றி, தமிழ் தேசியத்திற்கு எதிரான சகல ஆயுதக் குழுக்கள் பற்றிய தமது நிலையினைத் தெளிவான அறிக்கை மூலம் தெரிவிப்பதோடு, சமாதான சக்திகளுடன் இது பற்றிய எழுத்து மூலமான உடன்பாடு ஒன்றை உடனடியாக வெளிப்படுத்த வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள மலையக மக்கள் முன்னணி, மேல்மாகாண மக்கள் முன்னணி போன்ற அமைப்புகள் ஊடாக தமது நிலைப்பாட்டை எழுத்து மூலம் வெளிப்படுத்த வேண்டும். அப்போது தமிழ் மக்கள் எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் தொடர்பான தமது நிலைப்பாட்டை வெளியிட ஏதுவாக இருக்கும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

# பறவைக் காய்ச்சல் நோய் இலங்கையில் பரவும் அபாயம்

(கொழும்பு)

இலங்கையிலும் பறவைக் காய்ச்சல் நோய் பரவும் ஆபத்து உள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத்துணைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிழக்கு நாடுகளில் இருந்து தற்போது பறவைகள் கூட்டம் கூட்டமாக பெருமளவில் வருவதாலும், இந் நோய் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளதாகவும் மேற்படி திணைக்களத்தின் பணிப்பாளர் அமரசேகர தெரிவித்துள்ளார்.

பறவைக் காய்ச்சல் மனிதர்களின் ஊடாகப் பரவ ஆரம்பித்தால் அது தொற்றி விரைவில் பெரும் தொற்று நோயாக மாறக்கூடும் எனவும் உலக சுகாதார அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை இலங்கையில் இந்தப் பறவைக் காய்ச்சல் நோய் பரவாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சரவை யோசனைப் பத்திரம் ஒன்றை சுகாதார அமைச்சு முன் வைத்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த யோசனைகளின்படி இதற்காக தேசிய மற்றும் பிரதேச மட்டங்களில் சிறப்புக் குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன எனவும், பறவைக் காய்ச்சல் பரவும் நாடுகளில் இருந்து பறவை இனங்கள் இங்கு கொண்டுவரப்படுவதைத் தடுக்க ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது எனவும், கால்நடை மற்றும் சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது. (32)

## நீதவான் நீதிமன்றத்திடம் மரபணுசோதனை அதிகாரம்

நீதிமன்றத்தில் சந்தேகநபராக நிறுத்தப்படும் ஒருவரிடம் மரபணு பரிசோதனை மேற்கொள்ளுமாறு உத்தரவிடும் அதிகாரத்தை நீதவான் நீதிமன்றத்திற்கு வழங்கும் முகமாக சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

சொலிஸிட்டர் ஜெனரல் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதுவரை காலமும் சந்தேகநபரின் விருப்பத்தின் பேரில் மாத்திரமே மரபணு பரிசோதனையை மேற்கொள்ள முடியும். (3

## சுகாதார ஊழியர்கள் இன்று அடையாள பணிநிறுத்தப் போராட்டம்

சுகாதார ஊழியர்கள் இன்று அடையாள பணிநிறுத்தப் போராட்டம் ஒன்றில் ஈடுபடவுள்ளதாக சுகாதார சேவைகள் தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் சமன் ரட்ணப்பிரிய தெரிவித்துள்ளார். வரவு செலவுத் திட்ட பிரேரணை மூலம் உறுதியளிக்கப்பட்ட இரண்டாயிரத்து 500 ரூபா கொடுப்பனவுகளில் 50 சதவீதமான தொகை வழங்கவில்லை என கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

அமைச்சின் இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே இந்தப் பணி நிறுத்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை பொரளை ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை, டி சொய்சா மகப்பேறு வைத்தியசாலை, காசல் மகப்பேறு வைத்திய சாலை மற்றும் மகரகமை புற்றுநோய் வைத்தியசாலைகளின் பணிகள் வழமைபோல நடைபெறும் என சுகாதார ஊழியர் தொழிற் சங்கத்தின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (32)

# கடற்படையின் கெடுபிடிகளைக் கண்டித்து
# கடற்றொழிலாளர் புறக்கணிப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கடற்படையினரின் கெடுபிடிகளினால் தாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டும் வாழ்வாதாரத்தை இழந்துள்ளதாகவும் தெரிவித்து, வலிகாமம் தென் மேற்கு சுகுமன் துறை கடற்றொழிலாளர்கள் தொழில் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

சுகுமன் துறை கடற்றொழிலாளர்கள் மீது அண்மையில் கடற்படையினர் தீவிர கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டு பொறுமையை இழந்த கடற்றொழிலாளர்கள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தும் வகையில் கடந்த 16ஆம் திகதி ஆர்ப் பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர். அப்போது அங்குவந்த மாதகல் கடற்படை அதிகாரியிடம், அவர்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். ஆனால் அதன் மூலம் தீர்வு எதுவும் காணப்படாத நிலையிலேயே தொழிலாளர்கள் தற்போது தொழில் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தொழிலுக்காக கடலுக்குச் செல்லும் மீனவர்கள் காலை 6.00 மணிக்குப் பின்னரே கரைக்குத் திரும்ப வேண்டும் என்ற கடற்படையின் கட்டுப்பாட்டினால் இரவு வேளைகளில் கடலில் எதிர்பாராத புயல் அனர்த்தங்கள், கடல்வாழ் உயிரினங்களால் ஏதேனும் அனர்த்தங்கள் ஏற்பட்டாலும், கரைக்கு வர முடியாது கடலிலேயே உயிரை விடவேண்டிய அவலமும் ஏற்படுகின்றது.

கடற்றொழிலாளர்களுக்கு புதிய கடல் பாஸ் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் பெரும் தொகையான கடற்றொழிலாளர்களுக்கு தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாதுள்ளது.

எனவே இவ்வாறான மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளினால் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படுவதை வெளியுலகத்திற்கு தெரியப்படுத்துவதுடன், தமது போராட்டத்தை ஒருங்கிணைந்து முன்னெடுப்பதற்கு ,கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்களின் சம்மேளனங்கள், கடற்றொழில் நீரியல் திணைக்களம், ஊடகங்கள், மனித உரிமைகள் தொடர்பான அமைப்புகள் ஆகியன முன்வர வேண்டும் என கோரிக்கையும் விடப்பட்டுள்ளது.

## சோமாலியாவில் கப்பல் கடத்தல்; விடுவிக்கும் முயற்சி தோல்வி

(கொழும்பு)

சோமாலிய ஆயுதக் குழுவினரால் கடத்தப்பட்ட எச்.வி டொக்கலோச் கப்பலையும் அதன் கப்டனான இலங்கையரையும் விடுவிக்க மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன.

கப்பலின் நிறுவனமான மொகாட்டு கப்பல் நிறுவனமும் ஐக்கிய நாடுகள் சபையும் இதுவரை மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந் திருப்பதாகத் தெரியவந்துள்ளது.

சோமாலியக் கடற்பரப்பில் கடந்த 12 ஆம் திகதி சோமாலிய ஆயுதக் குழுவினரால் கடத்தப்பட்ட இந்தக் கப்பலின் கப்டனான ஏ.எச்.ஈ.டி சில்வா காலி தங்கெதரவைச் சேர்ந்தவராவார்.

கடத்தப்பட்ட கப்பலில் ஒன்பது கென்ய நாட்டு பணியாளர்களும் உள்ளனர்.

கடந்த ஜூன் மாதமும் சோமாலிய கடற்பரப்பில் கப்பலொன்று கடத்தப்பட்டது அந்த கப்பலின் கப்டனும் இலங்கையர் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலையில் கடும் மழை; சுனாமி குடியிருப்பாளர்கள் அவலம்

(திருகோணமலை)

திருகோணமலை நகரிலும் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் கடும் மழைபெய்து வருகிறது. இதனால் கடற்கோளினால் பாதிக்கப்பட்டு, தற்காலிகக் குடியிருப்புக்களில் தங்கியுள்ள குடும்பங்கள் பெரும் இன்னல்களுக்குள்ளானார்கள். தற்காலிகக் குடியிருப்புக் களில் தங்கியுள்ள மக்கள் மத்தியில் சின்னம்மை போன்ற தொற்றுநோய் களும் பரவிவருவதாக சுகாதாரப்பகு தியினர் தெரிவித்தனர். சுகாதாரப் பகுதித்தொண்டர்கள் சர்வதேச புலம்பெயர்தல் அமைப்பின் தொண்டர்களும் கூட்டாக தொற்றுநோய் பரவிவரும் தற்காலிக குடியிருப்புக்களுக்குச்சென்று தடுப்பூசி ஏற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது சிலதினங்களுக்கு முன்னர் கல்லடியில் உள்ள தற்காலிக குடியிருப்புக்களில் வாழும்மக் களுக்கு தொற்றுநோய் தடுப்பு மருந்துகள் கொடுக்கப்பட்டன. (25)

### அநுரா..

அநுரா பண்டாரநாயக்க தொடர்ந்து குற்றம்சாட்டி வந்தார்.

கொழும்பில் நேற்று மகிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்ட போது பாராளுமன்றக் கூட்டத்தில் அநுரா பண்டாரநாயக்க பங்கேற்றிருந்ததாக மூத்த அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

மகிந்தவின் தேர்தல் அறிக்கை வெளியீட்டு நிகழ்ச்சியில் ஜே.வி.பி ஜாதிக ஹெல உறுமய உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

## பிற்போடப்பட்டுள்ளது

(அலுவலகச்செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவிருந்த கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தித் திட்டமீளாய்வுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் அன்றைய தினம் நடைபெறமாட்டாதெனவும் மேற்படி திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் கிளி.மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார். .(சோ)

## நிராகரிப்பு

தபால் மூலம் சனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க விண்ணபித்த காலி மாவட்டத்தைச் சேர்ந்த மூவாயிரத்து 628 விண்ணப்பங்கள் நிராகாிக்கப்பட்டதாக உதவித் தேர்தல் ஆணையாளர் பந்துல ஹரிச்சந்திர தெரிவித்தார்.

விண்ணப்பப்படிவங்கள் முறையாக நிரப்பப்படாமையே இதற்கான காரணம் என அவர் குறிப்பிட்டார்.

22 ஆயிரத்து 982 பேர் காலி மாவட்டதில் தபால் மூலம் வாக்களிக்கக் கூடிய அரச ஊழியர்கள் இருந்த போதிலும் 19 ஆயிரத்து 354 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனா.

## ஊடகவியலாளர் நிமலராஜனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பத்திரிகையாளரும் யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற பல்வேறு தமிழ்மக்கள் மீதான கொடுமைகளை துணிச்சலுடன் வெளி உலகிற்குக் கொண்டு வந்தவருமான ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கத் தலைவர் க.தவச்செல்வன் தலைமையில் நேற்று இடம் பெற்றது

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தில் இடம் பெற்ற இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். நினைவுச் சுடரினை சகோதரி திருமதி. கதிர்வேல் ஜெகதீஸ்வரி ஏற்றி வைத்தார். மலர்மாலையை சிறியதந்தையார் கணபதிப்பிள்ளை யோகநாதன் அணிவித்தார்

நினைவுரைகளை யாழ். பல்கலைக்கழக மாணவர்ஒன்றியத் தலைவர் க.சிவரூபன், தமிழ் மாணவர் ஒன்றியத்தலைவர், வடஇலங்கை பத்திரிகையாளர்சங்கசெயலாளர் ப.தயாபரன், வலம்புரி ஆசிரியர் இ.சிவசுந்தரம, உயர்தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியத் தலைவர் சுகந்தன் உட்பட மற்றும் பலர் வழங்கினர்.

இவர் கொலை செய்யப்பட்டு ஐந்து வருடங்கள் பூர்த்தி அடைகின்ற போதிலும் குறிப்பிட்ட கொலைக்குக் காரணமாக இருந்தவர்களை இன்னும் சிறிலங்காப் பொலிசாா கண்டுபிடிக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (41)

## "பசுந்தேசம்" கலைஞர்கள் நேற்று கௌரவிக்கப்பட்டனர்

(கிளிநொச்சி)

பசும்தேசம் ஒலிப்பேழை கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வு நேற்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவணநடுவப் பணியகத்தில் பிற்பகல் 3.00மணிக்கு சிறுகதை ஆசிரியரும் மூத்த எழுத்தாளருமான சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் நடைபெற்றது.

பசுந்தேசம் ஒலிப்பேழை கலைஞர்கள் 38பேர் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.இந் நிகழ்வில் புலிகளின் குரல் நிறுவனப்பொறுப் பாளர் நா.தமிழன்பன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் நிகழ்வின் தலைவர் சிதம்பர திருச்செந்திநாதன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்கள். (46)

## படையினர் குவிக்கப்பட்டு யாழில் வீதிச் சோதனை தீவிரம்

யாழ். நாவலர் வீதியில் பெருமளவில் சிறிலங்காப் படையினர் குவிக்கப்பட்டு தீவிர வீதிச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. நேற்று அதிகாலை தொடங்கிய வீதிச் சோதனை மதியம் வரை இடம்பெற்றுள்ளது.

சிறிலங்காப் படையினரால் வழிமறிக்கப்பட்ட மக்கள் கடும் மழைக்கு மத்தியில் நீண்ட நேரம் தடுத்து வைக்கப்பட்டு கடும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.இதன் போது சிறிலங்காப் படையினருக்கு கப்பப்பணம் வழங்க மறுத்த பொதுமக்களுக்கு சொந்தமான ஐந்து உந்துருளிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. பறிமுதல் செய்யப்பட்ட உந்துருளிகள் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன.

### அவசரகாலச்சட்டம்..

சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் ரட்ண சிறி விக்கிரம நாயக்க நேற்று தாக்கல் செய்தார். இந்த சட்ட மூலவிவாதத்தில் பேசிய ரட்ணசிறி விக்கிரம நாயக்க நவம்பர் 13 ஆம் திகதிக்குப்பின் குறிப்பிடும்படியான வன்முறை மற்றும் வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்படாமல் இருந்தால் அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படாது என்று தெரிவித்தார். அவரசகாலச்சட்டத்தை நவம்பர் 13 ஆம்திகதிக்குப் பின்னர் எந்தச் சூழலிலும் நீடிக்கக்கூடாது என்று ஐ.தே கட்சியின் கொறடா மகிந்த சமரசிங்க வலியுறுத்தினார். இந்த நிபந்தனையின் அடிப்படையில்தான் தமது கட்சி தற்போதைய அவசரகாலச்சட்ட நீடிப்பிற்கு ஆதரவாக வாக்களிக்கும் என்றும் மகிந்த சமரசிங்க கூறினார். ஐ.தே கட்சி ஒவ்வொரு நீடிப்பிலும் அடுத்த நீடிப்பிற்கு தாம் ஆதரவாக வாக்களிக்க மாட்டோம் என்று தெரிவித்துவிட்டு ஆதரவாக வாக்களித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**அதிபர்கள்..**எதுவும் இடம் பெறவில்லை.யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக் கழகம், தொழில் நுட்பக்கல்லூரிகள் உட்பட சகல கல்வி நிலையங்களும் இயங்கவில்லை. இதேவேளை இன்று முதல் குடாநாட்டில் பாடசாலைகள் அனைத்தும் வழமைபோல் இயங்கவுள்ளன. (25,32)

### ராஜபக்ஷவின்...

கள் விடுதலை முன்னணியினதும் ஜாதிகஹெல உறுமயவினதும் யோசனைகள் மாத்திரமே இதில் முற்றுமுழுதாக உள்ளடக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

### இடைக்கால..

இந்தத் தேர்தல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தேர்தல் அறிக்கையை வெளியிட்டு மகிந்த ரா்ஜபக்ஷ உரையாற்றுகையில்;

நான்கு சவால்களுக்கு நான் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அதில் முதலாவது விடயம் சமாதானமாகும். ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து மக்களும் கௌரவத்துடன் வாழக்கூடிய சமாதானத்தை நான் உருவாக்கவுள்ளேன். போராட்டம் நடத்துபவர்களுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தி இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் திட்டமிட்டுள்ளேன் என்றார்.

யுத்தத்திற்கு வழிவகுக்காத வகையில் அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்படும். தமிழீழ வீடுதலைப்புலிகள் முன்வைத்த தன்னாட்சி நிர்வாக அதிகாரசபையை ஏற்க முடியாது. நோர்வே அனுசரணையுடன் 2002 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் முற்றாக மாற்றியமைக்கப்படும், ஐரோப்பிய போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிகளும் மீளாய்வு செய்யப்படும்எனத் தெரிவித்ததோடு நாட்டின் இறைமைக்குப்பங்கம் ஏற்படுத்தாத ஒற்றை ஆட்சியின் கீழ் பேச்சுக்களூடாக கௌரவமான சமாதானத்தை அடைவதே தனது நோக்கமெனவும் இதற்காக குறித்த கால எல்லைக்குள் சகல கட்சிகளுடனும் கூடி பொது உடன்பாட்டிற்கு வரவுள்ளதாகவும் மகிந்தராஜபக்ஷ மேலும் கூறினார்.

இதேசமயம், இவ்வெளியீட்டு நிகழ்வின் பின்னர் பத்திரிகையாளர்களிடம் பேசிய அமைச்சர் மங்கள சமரவீர மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒற்றை ஆட்சி முறையின்கீழே இனப்பிரச்சினைக்கு தீர்வு, வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம் மற்றும் சுயநிர்ணய உரிமை கள் போன்ற எண்ணக்கருக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது எனக் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு முன்னர் தெற்கிலுள்ள கட்சிகளுடன் மகிந்தராஜபக்ஷ பொது உடன்பாடு ஒன்றைக்காணுவார் எனவும் சமாதானத்தை அடைய காலஎல்லை ஒன்று நிர்ணயிக்கப்படும் என்றும் மங்கள சமரவீர கூறினார்.

இதேவேளை சுனாமிக்குப்பின்னரான பொது முகாமைத்துவக் கட்டமைப்பை முழுமையாகக் கைவிட்டு அதற்குப் பதிலாக ஜயலங்கா என்ற புதிய அமைப்பு ஒன்றையும் உருவாக்க மகிந்த ராஜபக்ஷ உறுதி அளித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (32)

### அவரசகால...

அமைப்பு மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் பொருளுதவி மற்றும் சேவைகளை வழங்குவதனையும் இந்தச் சட்டம் தடை செய்தது.

இத்தகைய சட்டத்தால் "எந்தவொரு அமைப்பினது சட்டபூர்வ மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு உதவி செய்யும் அமெரிக்க குடிமக்கள் பாதிக்கப்படுவதாக ஆட்சேபனைகள் எழுந்தன.

இந்த நிலையில் அமெரிக்காவில் உள்ள மனித உரிமைகள் அமைப்புக்கள் மற்றும் அமெரிக்க- தமிழ் அமைப்புக்கள் இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவளிக்கவும் புலிகளின் நிர்வாகப் பகுதிகளில் சேவையாற்றவும் தடையாக இருக்கும். இந்த 2001 ஆம் ஆண்டு சட்டத்தை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனா்.

சட்டபூர்வ உரிமைகளுக்கான மையத்தினரால் இந்த வழக்கு தொடரப்படவுள்ளது.

மற்றொரு அமெரிக்க தேசாபிமான சட்டமானது ஒகாலனின் குர்திஸ்தான் விடுதலை அமைப்பு மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குப் பயிற்சியளித்தல் ஆலோசனை வழங்குதல் மற்றும் சேவையாற்றுதலை தடை செய்வதை சட்டபூர்வமற்றது என்று கடந்த யூலை மாதம் அமெரிக்க நீதிபதி ஒட்றி கொலின்ஸ் அறிவித்திருந்திருந்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.